# தமிழன்
THAMILAN தමිළන්

Follow us:

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 490 பிலவ வருடம், பங்குனி மாதம் 16ஆம் திகதி புதன்கிழமை (30.03.2022) ஹிஜ்ரி - 1443, ஷஃபான் - 26 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## பங்களாதேஷிடம் மீண்டும் கடன் கோரிய இலங்கை

பங்களாதேஷிடமிருந்து மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி வசதியை இலங்கை கோரியுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான நாணய பரிமாற்ற ஏற்பாடாக இது அமையும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னரும், அந்நிய செலாவணி நெருக்கடியை சமாளிக்க பங்களாதேஷ் இதேபோன்ற வசதியை இலங்கைக்கு வழங்கியது.

02 பக்கம்

## டொலரின் பெறுமதி ரூ. 450 வரை உயரும்!



எதிர்வுகூறும் பேராசிரியர் அமிந்த மெத்சில

02 பக்கம்

## மைத்ரிக்கு உத்தியோகபூர்வ இல்லம் வழங்கும் முடிவுக்கு

### உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை



முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிற்கு பெஜெட் வீதியிலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தை நிரந்தரமாக வழங்குவதற்கு அமைச்சரவை எடுத்த தீர்மானத்தை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்துள்ளது.

02 பக்கம்

## ஷெட்களுக்கு மூடுவிழா!

### எரிபொருள் இல்லாததால் நிலைமை மோசமானது



படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன

டீசல் மற்றும் பெற்றோல் தட்டுப்பாடு காரணமாக கொழும்பு மற்றும் ஏனைய பகுதிகளில் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்கள் நேற்றுமுதல் (29) மூடப்பட்டுள்ளன.

எரிபொருள் நிரப்பு நிலையங்கள் அருகே டீசல் மட்டுமன்றி, பெற்றோல் வாங்கவும் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்ததைக் காணமுடிகிறது.

02 பக்கம்

## சம்பிக்கவின் மீளாய்வு மனு விசாரணையின்றி தள்ளுபடி

இராஜகிரியவில் இடம்பெற்ற விபத்தில் சாட்சியத்தை மறைத்த குற்றச்சாட்டில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், சாட்சி விசாரணையை கைவிடுமாறு கோரி நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தாக்கல் செய்த மீளாய்வு மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணையின்றி தள்ளுபடி செய்துள்ளது.

02 பக்கம்


Tweets | Tweets & replies | Media | Likes

Dr. S. Jaishankar @DrSJaishanka · 37m
Disturbed to see this news. Am asking High Commissioner Baglay to contact and discuss how India can help.
@IndiainSL

#NeighbourhoodFirst

Sri Lanka Tweet @SriLankaTweet · 1h
Scheduled surgeries at the Peradeniya Hospital were suspended due to a shortage of medicines. Only emergency surgeries are taking place - NewsFirst #LKA #SriLanka #EconomicCrisisLK

41 285 1,251

## பேராதனை வைத்தியசாலையில் இடைநிறுத்தப்பட்ட சத்திர சிகிச்சைகள்:

### இந்திய வெளிவிவகார அமைச்சரின் கவனத்தின் பின்னர் மீள ஆரம்பம்

02 பக்கம்

## அமைச்சரவையின் முக்கிய முடிவுகள்

- இலங்கை தொடர்பான சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) பிரிவு IV பணியாளர் அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு குறைந்த வருமானம் பெறுவோருக்கு தலா 5,000 ரூபா கொடுப்பனவை இரண்டு மாத காலத்திற்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. 3.1 மில்லியன் குடும்பங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.
- புகையிரதக் கட்டணங்களை திருத்துவதற்கு இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.
- மின் கட்டணங்கள், எரிவாயு விலைகள் மற்றும் எரிபொருட்களின் விலைகள் தற்போதைக்கு அதிகரிக்கப்பட மாட்டாது - என நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அமைச்சரவைக்கு அறிவிப்பு.



பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (29) நடைபெற்றபோது இந்த அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கலந்துகொண்டனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

## கமெண்ட் கந்தர்..



தேசிய அரசொன்றை அமைத்து ஜெய்ஷங்கரை பிரதமரா போட்டால் பல பிரச்சினைகளை தீர்த்திடலாம் பாருங்கோ...

## வங்கி வீதங்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு நாணயங்களுக்கு பணம் வழங்க வேண்டாம்

### நாணயமாற்று நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கி அறிவுறுத்து

02 பக்கம்

## 1000 கொள்கலன்கள் துறைமுகத்தில் தேக்கம்!

### பண்டிகைக் காலத்தில் அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படும் நிலை

•யோ. தர்மராஜ்

அரிசி, சீனி, பருப்பு, மிளகாய் ஆகிய பொருட்கள் அடங்கிய மேலும் ஆயிரம் கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அத்தியாவசிய உணவுப்பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் 'தமிழன்' நாளிதழுக்கு தெரிவித்தார்.

02 பக்கம்



## போதைப்பொருள் அச்சுறுத்தலே நாட்டில் பெரும் பிரச்சினை

### எரிவாயு, பெற்றோல் வரிசைகள் அல்லவென்கிறார் நாமல்

02 பக்கம்

## நாடாளுமன்றத்தைக் கலைத்து தேர்தலுக்கு செல்வதே ஒரே வழி!



### அப்போது தாமரை மொட்டின் கதை கந்தல் என்கிறார் கம்மன்பில

02 பக்கம்

## உஷ்



நாடாளுமன்ற எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் பதவியை கைப்பற்ற விமல் அணி திட்டமிடுகிறதாம். அதற்காக எம்.பிக்களை திரட்ட இரகசியப் பேச்சு நடக்கிறதாம்.

அதற்கிடையில் இவ்வாரம் அமைச்சுப் பதவியை இராஜினாமா செய்யவுள்ளாராம் வாசுதேவ.



இலங்கை வந்துள்ள இந்திய வெளிநாட்டமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர், சுவசெரிய அம்பியூலன்ஸ் மத்திய நிலையத்திற்கு நேற்று சென்று அதன் நிலைமைகளை பார்வையிட்டார்.

## நான் பதவியில் இருந்திருந்தால் மக்கள் வரிசையில் நிற்கும் நிலை வந்திருக்காது

### ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

•யோ. தர்மராஜ்

நாட்டில் தற்போது நான் பிரதமராகவோ அல்லது ஜனாதிபதியாகவோ இருந்திருந்தால் மக்கள் வரிசைகளில் நிற்கும் நிலைமை ஏற்பட்டிருக்காது, அவ்வாறு ஏற்பட்டிருக்க இடமளித்திருக்கவும் மாட்டேன் என முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார். நாட்டின் நிலைமை குறித்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

02 பக்கம்

## எரிபொருளுக்கு நிவாரணம் தேவை: இல்லையேல் அடுத்தவாரம் ஸ்ட்ரைக்!



### தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் எச்சரிக்கை

எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு நான் பொறுப்பாக முடியாது. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கமே பதிலளிக்க வேண்டும். இந்த வாரத்துக்குள் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காவிட்டால், அடுத்தவாரத்தின் முற்பகுதியில் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

டீசல் இல்லாமல் பஸ் போக்குவரத்தை முன்னெடுப்பதென்பது பிரச்சினைக்குரிய செயற்பாடாக மாறியுள்ளதாகவும், டீசல் இல்லாமல் இதுவரையில் 10 ஆயிரத்துக்கும்...

02 பக்கம்



இலங்கை வந்துள்ள இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமை நேற்று சந்தித்தார். இலங்கையின் தற்போதைய அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டன.



அரசாங்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பொலனறுவையில் விவசாயிகள் நேற்று (29) மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

## பங்களாதேஷிடம்...

ஏற்கனவே இந்தியாவிடம் இருந்து பெற்ற ஒரு பில்லியன் டொலர்களுக்கு மேலதிகமாக மேலும் ஒரு பில்லியன் டொலர்களை இலங்கை இந்தியாவிடம் கோரியுள்ளது.

அத்துடன் சீனாவிடம் இருந்தும் 2.5பில்லியன் டொலர்களை இலங்கை கடனாக கோரியுள்ளது.

## 1000 கொள்கலன்கள்...

மேலும், அவற்றை விரைவில் விடுவிப்பது குறித்து அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளதாகவும் அவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இவற்றை விடுவிக்க தவறும் பட்சத்தில் தமிழ் – சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மேலதிக உணவுப் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கான நெருக்கடி நிலைமை ஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

டொலர் நெருக்கடியால் ஏற்பட்ட இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணும் வகையில் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தை சாதக தன்மையை ஏற்படுத்தியுள்ளதால் எதிர்காலத்தில் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு பாதிப்பு ஏற்படாது.

ஆனால் துறைமுகத்தில் இருந்து வெளியேற்ற தாமதம் ஏற்பட்டால் நெருக்கடி உருவாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மைத்ரிக்கு உத்தியோகபூர்வ...

நீதியரசர்களான பி.பத்மன் சூரசேன, யசந்த கோதாகொட மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த உத்தரவு நான்கு வாரங்களுக்கு அமுலில் இருக்கும்.

இந்த வழக்கு நீதிமன்றங்களில் விசாரணைக்கு வரும் வரை இடைநீக்கம் உத்தரவு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து தாக்கல் செய்த மனுவை பரிசீலித்தபோதே இந்த தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## சம்பிக்கவின் மீளாய்வு...

அதற்கமைய, பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் அனுப்புமாறு முன்வைக்கப்பட்ட கோரிக்கையும் நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில், நீதிபதிகளான மேனகா விஜயசுந்தர மற்றும் எஸ்.குமாரரத்ன ஆகியோர் முன்னிலையில் குறித்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே தள்ளுபடி செய்யப்பட்டது.

இராஜகிரிய விபத்தில் சாட்சியங்களை மறைத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில், சாட்சி விசாரணைகளை கைவிடுமாறு கோரி குறித்த மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணையை முன்னகர்த்தி கொண்டு செல்ல முடியாது என்பதால், சாட்சி விசாரணைகளை கைவிடுமாறு பாட்டலி சம்பிக்க ரணவக்க சார்பில் ஆஜரான சட்டத்தரணி முன்வைத்த கோரிக்கையை கொழும்பு மேல் நீதிமன்றம் நிராகரித்ததையடுத்து, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மீளாய்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.

## நான் பதவியில்...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போது நான் பிரதமர் மற்றும் ஜனாதிபதியாகவோ இருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது. இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருப்பதற்கு இடமளித்திருக்கவும் மாட்டேன். சித்திரை புத்தாண்டை எவ்வாறு கொண்டாடுவது என்றும் எங்கு செல்லலாம் என்றுமே மக்கள் சிந்தித்திருப்பார்கள்.

வரிசைகளில் நிற்பதை தவிர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு சிறிது காலம் செல்லும். இந்தியாவிடமிருந்து கிடைத்த நிதியினால் வழங்கப்படும் மானியம் மே மாதத்தில் நிறைவடைந்துவிடும்.

ஜனவரி மாதத்தில் நாங்கள் 500 மில்லியன் டொலர் பெற்ற போது ஒரு கப்பலுக்கு 23 – 30 மில்லியன் டொலரை செலுத்தினோம். ஆனால், இன்று 40 -50 மில்லியன் டொலரையே செலுத்துகிறோம்.

அன்று பெற்றுக்கொண்ட கப்பல்களில் அரைவாசியையே தற்போது எங்களால் பெற்றுக்கொள்ள முடியும். மே மாதத்திற்கு பின்னர் எங்களுக்கு நிதி இல்லை. பொருட்களை கொள்வனவு செய்வதற்கு என்ன செய்யப்போகின்றோம் என்பது குறித்து சிந்திக்க வேண்டும். ஒரு பில்லியன் கிடைக்கும் பணமும் நிறைவடையும். பின்னர் என்ன செய்வது.?

எனவே, உலக நாடுகளுடன் கலந்துரையாடி ஒரு இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். இல்லையேல் அரசாங்கத்தை வீட்டுக்கு அனுப்ப வேண்டிவரும். எதிர்வரும் சில நாட்களுக்குள் உரிய நடவடிக்கையை அரசாங்கம் எடுக்க வேண்டும். எமக்கு தேர்தல் வேண்டுமா அல்லது நோயாளிகளுக்கு தேவையான மருந்துகளை பெற்றுக்கொள்வதற்கான அந்நிய செலாவணி வேண்டுமா என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும் - என்றார்.

## ஷெட்களுக்கு...

எரிபொருள் தட்டுப்பாடு நீடிப்பதால் பல பெற்றோல் நிலையங்களில் டீசல் அல்லது பெற்றோல் இல்லை என்று பதாகைகள் காணப்பட்டன. மக்கள் நீண்ட வரிசையில் மணிக்கணக்கில் நின்றபடி கேன்களை எடுத்துச் செல்வதை காணமுடிந்தது.

சில பெற்றோல் நிலையங்களில் போத்தல்கள் மற்றும் கேன்களில் எரிபொருள் விநியோகம் செய்வது நிறுத்தப்பட்டதால் மக்கள் ஜெனரேட்டர்கள் மற்றும் விவசாய கருவிகளுடன் வரிசையில் நிற்கக் காணப்பட்டனர்.

நேற்று பிற்பகல் வரை கொழும்பு மற்றும் வெளியூர்களில் உள்ள பல எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு டீசல் மற்றும் பெற்றோல் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் எரிபொருள் வாங்க வரும் மக்களிடையே காரசாரமான வார்த்தைப் பரிமாற்றமும் நடக்கிறது.

நிலைமையை தணிக்க பல இடங்களில் பொலிஸாருக்கு மேலதிகமாக இராணுவத்தினர் குவிக்கப்பட்டனர்.

டீசல், பெற்றோல் மட்டுமின்றி, மண்ணெண்ணெய் வாங்கவும் மக்கள் வரிசையில் காத்திருந்தனர்.

## போதைப்பொருள்...

**யோ. தர்மராஜ்**

நாட்டில் எரிவாயு, பெற்றோல் வரிசைகளை விடவும் பாரிய பிரச்சினைகள் நாட்டில் இருக்கின்றன. அதன்படி, போதைப்பொருள் அச்சுறுத்தலே இன்று நம் நாட்டில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மொரட்டுவ மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் பலர் எரிவாயு வரிசை பற்றி பேசுகிறார்கள். பெற்றோல் வரிசை பற்றியும் இதேபோன்று, இன்னும் பல வரிசைகளையும் ஊடகங்களில் காட்டுகின்றன. பெற்றோர்களுக்கும் குழந்தைகளுக்கும் இது பாரிய பிரச்சினையாக இருக்கின்றன.

ஆனால், அதையும் தாண்டிய போதைப்பொருள் அச்சுறுத்தலே இன்று நம் நாட்டில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது. நாங்கள் அந்த பிரச்சினை பற்றி பேசவில்லை. ஊடகங்களில் காட்டப்படுவதில்லை.

எனவே குழந்தைகளை விளையாட்டில் ஈடுபடுத்துவதன் ஊடாகவே போதைப்பொருளில் இருந்து அவர்களை விலக்கி வைக்க முடியும்.

சுறுசுறுப்பான குழந்தையை உருவாக்குங்கள். உங்கள் பாடசாலையில் சுறுசுறுப்பான குழந்தையை நீங்கள் உருவாக்கினால், ஒரு நாள் நாட்டிற்கு பெருமை சேர்க்கக்கூடிய ஒரு குழந்தையை உருவாக்கிவிட்டீர்கள் என நீங்கள் பெருமைப்படலாம்.

கல்வி, பல்கலைக்கழகம், விளையாட்டு, கலை என எதுவானாலும், சுறுசுறுப்பான ஒழுக்கமுள்ள குழந்தையை நாம் உருவாக்கினால், சமுதாயத்திற்குப் பயன்படும் குழந்தை எங்களுடைய காலத்தில் உருவாக்கப்பட்டது என இந்த ஆசிரியர்கள் மகிழ்ச்சியடையலாம் - என்றார்.

## பேராதனை...

மருந்துகளின் தட்டுப்பாடு காரணமாக பேராதனை போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளவிருந்த சத்திர சிகிச்சைகள் இடைநிறுத்தப்பட்டமை தொடர்பில் இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்ஷங்கர் நேற்று கவனம் செலுத்தினார்.

இந்த விடயம் தொடர்பாக இந்தியா உதவக்கூடிய வழிகள் குறித்து ஆராயுமாறு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் இந்திய வெளிவிவகார அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனையடுத்து கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் பேராதனை வைத்தியசாலை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு குறைபாடுகளை தீர்க்க ஏற்பாடு செய்தது.

இதேவேளை, மருந்துகளுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தினால் பேராதனை போதனா வைத்தியசாலையில் திகதியிடப்பட்டிருந்த அனைத்து சத்திர சிகிச்சைகளும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன.

எவ்வாறாயினும், அத்தியாவசிய சத்திர சிகிச்சைகள் மாத்திரம் முன்னெடுக்கப்படும் என பேராதனை போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இது குறித்து ஔடத உற்பத்திகள், வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சிடம் வினவியபோது, விநியோகஸ்தர்களின் தாமதம் காரணமாக சத்திர சிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் மருந்தொன்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

குறித்த மருந்தை விரைவில் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், பேராதனை வைத்தியசாலை உள்ளிட்ட பல வைத்தியசாலைகளில் குறித்த மருந்து மிகக்குறைந்தளவே கையிருப்பிலுள்ளதாக வைத்தியர் சமன் ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

இதனிடையே, 248 அத்தியாவசிய மருந்துகளை இறக்குமதி செய்வதற்கான பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், இவற்றில் 16 அத்தியாவசிய மருந்துகளுக்கான கடன் கடிதங்களை துரிதமாக வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்றா நோய்கள், இருதய நோய்கள் உள்ளடங்கலாக பல நோய்களுக்கு பயன்படுத்தப்படும் 16 வகையான மருந்துகளும் இதில் அடங்குகின்றன.

இதேவேளை, தேவையான மருந்துகள் வழங்கப்படுமென மருந்து விநியோக பிரிவினால் உறுதியளிக்கப்பட்டதை அடுத்து இடைநிறுத்தப்பட்ட சத்திர சிகிச்சைகள் மீள ஆரம்பமாகியுள்ளதாக பேராதனை போதனா வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

## வங்கி வீதங்களுக்கு...

அனுமதிப் பத்திரங்களை பெற்ற வங்கிகள் வழங்கும் வீதங்களுக்கு மேலதிகமாக வெளிநாட்டு நாணயங்களுக்கு பணத்தை வழங்கும் பதிவு செய்யப்பட்டுள்ள நாணய மாற்று நிறுவனங்களின் அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு மத்திய வங்கி இதனை அறிவித்துள்ளது. அனுமதிப் பத்திரங்களை பெற்றுள்ள வங்கிகளை விட அதிக அந்நிய செலாவணி விகிதங்களை வழங்குவது 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க அந்நியச் செலாவணி சட்டத்தின்கீழ் தடைசெய்யப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நாணய மாற்று நிறுவனங்கள் அமெரிக்க டொலர்கள் உட்பட வெளிநாட்டு நாணயங்களை அதிக விலை கொடுத்து கொள்வனவு செய்வதாக கூறப்படுகிறது.

இதன் காரணமாக அனுமதிப்பெற்ற வங்கிகளில் வெளிநாட்டு நாணயங்களை மாற்றுவது குறைந்துள்ளதாக பேசப்படுகிறது.

## டொலரின் பெறுமதி...

இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியால் அமெரிக்க டொலர் 450 ரூபாவை நெருங்குவதைத் தடுக்க முடியாது என இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்தின் வர்த்தக கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அமிந்த மெத்சில பெரேரா தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடிக்கான காரணத்தையும் பிரச்சினையின் அளவையும் அரசாங்கம் இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றும் அவர் கூறினார்.

அரசாங்கத்தின் சில தவறான முடிவுகளால் நிதி ஒழுக்கம் சீர்குலைந்தது மட்டுமல்லாமல், பட்ஜெட்டில் அரசாங்க வருவாயும் 25 வீதம் குறைக்கப்பட்டது. இதை முதலில் பார்த்தபோது செலவு பக்கத்தைக் குறைக்க வேண்டும் என்று சொன்னோம். எனினும் அரசாங்கம் அரசியல் பிரசாரத்துடன் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்தது. வருமானத்துக்குப் பதிலாக செலவுகள் அதிகரித்த போது கடன் வாங்க வேண்டியதாயிற்று.

ஆனால், தற்போது கடன் தராத நிலை ஏற்பட்டுள்ளது. இலகுவாக அரசாங்கம் பணத்தை அச்சடிப்பதைத் தொடர்ந்தது. இதனால் டொலர் மதிப்பு உயர்கிறது. இந்த அரசாங்கம் வந்ததும் 180 ரூபாவாக இருந்த டொலரைக் கட்டுப்படுத்த அரசாங்கம் முயற்சித்தது. டொலரை நெகிழ்வாக வைத்திருக்கச் சொன்னோம். ஒன்றரை வருடங்களுக்கு முன்பு சொன்னதைக் கேட்டிருந்தால், இன்று 230 ரூபாவுடன் டொலரை நிறுத்த வாய்ப்பு கிடைத்திருக்கும் என்றார்.

## எரிபொருளுக்கு...

அதிகமான பஸ்கள் போக்குவரத்திலிருந்து விலகியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதுதொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் நேற்று (29) கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடுபூராகவும் இன்று (நேற்று - 29) 06 ஆயிரம் தனியார் பஸ்களே சேவையில் ஈடுபட்டிருந்தன. எரிபொருள் பிரச்சினைக்கு இந்தவாரம் தீர்வொன்று கிடைக்காவிட்டால் நிச்சயமாக அடுத்தவாரத்தில் நாடு முழுவதும் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்போம். இதனை அரசாங்கத்துக்கு முன்னெச்சரிக்கையாக தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இது தொடர்பில் மாகாணங்களுக்கிடையிலான பஸ் உரிமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட தனியார் பஸ் சங்கங்களுடன் பேசியுள்ளேன். தனியார் பஸ் உரிமையாளர்கள் தவிர்ந்த பாடசாலை வேன், கொள்கலன் போக்குவரத்து உள்ளிட்ட சகல போக்குவரத்து சங்கங்களுடனும் கலந்துரையாடி பாரிய எதிர்ப்பு செயற்பாடொன்றுக்கும் தயாராக இருக்கிறோம்.

தனியார் பஸ்களுக்கு இலங்கை போக்குவரத்துச் சபையினால் எரிபொருளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தாலும், இதுவரையில் டிப்போக்களினால் தனியார் பஸ்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை.

தூரப் பிரதேசங்களுக்கான தனியார் பஸ் சேவையில் இரு பிரச்சினைகள் இருக்கின்றன. ஒன்று இந்த வாரத்துக்கு மாத்திரமே எரிபொருள் இருக்கிறது. ஆகவே, இந்த வாரத்துக்குள் எரிபொருள் நெருக்கடிக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டியது அவசியம். மற்றையது, குத்தகை பிரச்சினை. மார்ச் 31ஆம் திகதியாகும்போது (நாளை) குத்தகைப் பிரச்சினையும் பெரிதாகும்.

இவ்விரு பிரச்சினைகளுக்கும் உடனடி தீர்வு கிடைக்காவிட்டால் மேற்குறிப்பிட்ட இரு அல்லது ஒரு காரணத்தின் அடிப்படையில் வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்க நேரிடும்.

புகையிரதக் கட்டண அதிகரிப்பு எங்களுக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது. அதனால், எங்களுக்கு எவ்வித பயனும் கிடைக்கப் போவதில்லை. 5 சதவீதமான பயணிகளுக்காக மாத்திரமே புகையிரத சேவை இடம்பெறுகிறது. ஆனால், நூற்றுக்கு 35 வீதம் தனியார் பஸ்கள் போக்குவரத்துக்கு பங்களிப்புச் செய்கின்றன. புகையிரத சேவையும் தனியார் பஸ் சேவையும் ஆகாயமும் நிலமும் போன்றது.

இந்தப் பிரச்சினையை தீர்க்குமாறு நாளாந்தம் அழுதுகொண்டிருக்க முடியாது. அழுவதற்கும் வரையறை இருக்கிறது. இதனால், நாங்களே நெருக்கடிக்குள்ளாகிறோம். எரிபொருளுக்கு தட்டுப்பாடு இருக்கிறது என்று தொடர்ச்சியாகக் குற்றஞ்சாட்டுகையில், தினந்தோறும் என்னாலும் அதனை கேட்டுக்கொண்டிருக்க முடியாது. அனைத்துக்கும் வரையறை இருக்கிறது. நானுமொரு மனிதன்.

காலையிலிருந்து மாலைவரையும் எரிபொருள் இல்லையென நாட்டின் ஒவ்வொரு பிரதேசங்களிலிருந்தும் எனக்கு அழைப்பு வருகிறது. அதற்கு நான் என்ன செய்வது. அதனடிப்படையில், ஒரு நாள் அல்லது இரு நாட்களுக்கு வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுப்போம் என பஸ் உரிமையாளர்களுக்கு அறிவித்துள்ளேன். எரிபொருள் இல்லையென்றால், அனைவருக்கும் நன்மை பயக்கும் வகையில் போக்குவரத்து நடவடிக்கைகளை இரத்துச்செய்ய தீர்மானித்துள்ளோம் என்றார்.

## நாடாளுமன்றத்தைக்...

**யோ. தர்மராஜ்**

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட கட்சியின் தலைவராக பெசில் ராஜபக்ஷ இருப்பதால் அவர் அதிகாரமிக்கவராக இருக்கின்றார். அவருடைய அதிகாரத்தை இல்லாது செய்வதற்கு நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்குச் செல்வதே ஒரே வழியாகும். அதன் பின்னர் மொட்டுவின் கதை முடிந்துவிடும் என முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

அத்தோடு, ஜனாதிபதியின் விருப்பத்திற்கு ஏற்ப நாடாளுமன்றத்தை கலைப்பதற்கே இரண்டரை வருடங்கள் செல்ல வேண்டும். மாறாக, நாடாளுமன்றத்தின் விருப்பத்திற்கு அமைய எவ்வேளையிலும் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

பிவித்துரு ஹெல உறுமய தலைமையகத்தில் நேற்று (29) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரண்டரை வருடங்கள் செல்லும் வரை நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது என சபாநாயகர் கூறியதாக செய்திகள் வெளிவந்துள்ளன. அவருக்கு யாரே தவறான ஆலோசனைகளை வழங்கியிருக்கிறார்கள். அரசாங்கத்தை கலைத்து தங்களுக்கு தேவையான அரசாங்கத்தை அமைக்கும் வாய்ப்பை நாங்கள் மக்களுக்கு வழங்கும் வகையில் செயற்படுகின்றோம்.

எனவே, சபாநாயகருக்கு யாரோ தவறான ஆலோசனையை வழங்கியுள்ளனர். ஜனாதிபதியின் விருப்பத்திற்கு ஏற்ப நாடாளுமன்றத்தை கலைப்பதற்கே இரண்டரை வருடங்கள் செல்ல வேண்டும். மாறாக, நாடாளுமன்றத்தின் விருப்பத்திற்கு அமைய எவ்வேளையிலும் நாடாளுமன்றத்தை கலைக்க முடியுமென அரசியலமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, நாடாளுமன்றத்தில் யோசனை நிறைவேற்றி நாடாளுமன்றத்தை கலைக்குமாறு ஜனாதிபதியிடம் கோரினால், ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தை கலைக்க வேண்டும். ஆனால், ஜனாதிபதி விருப்பத்திற்கு ஏற்ப நாடாளுமன்றத்தின் முதல் அமர்வு கூடியது தொடக்கம் இரண்டு வருடங்களும் ஆறு மாதங்களும் செல்லும் வரை ஜனாதிபதியினால் நாடாளுமன்றத்தை கலைக்கவே முடியாது என அரசியலமைப்பில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

அதன்படி, 2023 மார்ச் 3ஆம் திகதியே நாடாளுமன்றத்தை கலைக்க முடியும். அதுவரை நாங்கள் காத்திருக்க வேண்டும். ஆனால், நாடாளுமன்றத்தில் யோசனை ஒன்றை நிறைவேற்றினால் எவ்வேளையிலும் கலைக்க முடியும். எனவே, நாங்கள் நாடாளுமன்றத்தை கலைப்பது தொடர்பாக பேச ஆரம்பித்ததும் பெசில் ராஜபக்ஷவின் மோசமான செயல்களுக்கு துணைபோன உறுப்பினர்களின் நெஞ்சு வலிக்க ஆரம்பித்துள்ளது. அவர்களை மகிழ்ச்சிப்படுத்தவே அரசினால் இவ்வாறு போலியான பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

சபையில் 20 பேர் இருக்கும்போது 11 பேர் ஆதரவளித்தால் நாடாளுமன்றத்தை கலைக்க முடியும். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் செயற்பட முடியாதளவிற்கு எங்களுக்கு எவ்வித பிரச்சினையும் ஏற்பட்டதில்லை. மாறாக, நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் கொண்டுள்ள பெசில் ராஜபக்ஷவுடனே எங்களால் செயற்பட முடியாதுள்ளது.

இந்த நிலையில் முழு ராஜபக்ஷ குடும்பத்தை வீட்டுக்கு அனுப்புவதற்கு இன்னும் 3 வருடங்கள் காத்திருக்க வேண்டும் என சிலர் கூறுகின்றனர். நாங்கள் அவ்வளவு காலம் காத்திருந்தால் எங்களுக்கு நாடு இருக்காது.

நாட்டின் அதிகாரம் ஜனாதிபதியிடமில்லை. மாறாக, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையுள்ளவரிடமே நாட்டின் அதிகாரமும் இருக்கின்றது. ஜனாதிபதிக்கு அதிகாரம் இருக்கும் என்றால் அன்றே அவர் அதிகாரம் படைத்தவராக இருப்பார். 2001ஆம் ஆண்டு நிறைவேற்று ஜனாதிபதியாக சந்திரிகா இருந்தபோது, நாடாளுமன்றத்தில் அதிகாரம் படைத்தவராக ரணில் விக்ரமசிங்க காணப்பட்டார். அவரே நாட்டையும் ஆட்சி செய்தார். அதேபோன்று, 2015ஆம் ஆண்டும் பிரதமராக இருந்த ரணில் விக்ரமசிங்கவே நாட்டை ஆட்சி செய்தார்.

அதேபோன்று, இன்று நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக ஜனாதிபதி இருந்தாலும் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அதிகாரம் கொண்ட கட்சியின் தலைவராக இருக்கும் பெசில் ராஜபக்ஷவே நாட்டை ஆட்சி செய்கின்றார். நிதி அமைச்சராக இருப்பதால் அவர் நாட்டை ஆட்சி செய்கின்றார் என்றால் இதற்கு முன்பிருந்த நிதி அமைச்சர்களும் நாட்டை ஆட்சி செய்திருக்க வேண்டும்.

எனவே, நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் கொண்ட கட்சியின் தலைவராக பெசில் ராஜபக்ஷ இருப்பதால் அவர் அதிகாரமிக்கவராக இருக்கின்றார். அவருடைய அதிகாரத்தை இல்லாது செய்வதற்கு நாடாளுமன்றத்தை கலைத்து தேர்தலுக்குச் செல்வதே ஒரே வழியாகும். அதன் பின்னர் மொட்டுவின் கதை முடிந்துவிடும்.

மேலும், 20ஆவது திருத்தத்தில் மறைந்து கொண்டு பொதுஜன பெரமுனவின் தலைவராக இருப்பதாலேயே அவர் நாட்டை ஆட்சி செய்கின்றார். எனவே, 19ஆவது திருத்தம் கொண்டுவரும்போது மறைக்கப்படாத துளைகளை மூடுவதற்காக 22ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவருவதற்கு நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

நாடாளுமன்ற இரட்டைக் குடியுரிமைக் கொண்ட ஒருவர் ஜனாதிபதி பதவியில் மாத்திரமல்ல, அரசின் எந்தவொரு உயர் பதவியிலும் இருக்க முடியாதவாறே 22ஆவது அரசியலமைப்பு திருத்தம் கொண்டுவரப்படும். இந்த யோசனையை தனிநபர் யோசனையாக ஏப்ரல் மாதத்தில் நாடாளுமன்றத்தில் முன்வைப் போம் - என்றார்.

# மோட்டார் சைக்கிள் விபத்துகளை தடுக்க முன்மாதிரியான பொறிமுறை

## தலைக்கவசம் இல்லாமல் பயணிப்போருக்கு யாழில் வடிவமைப்பு




(யாழ்.செய்தியாளர்)

தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் சைக்கிளை செலுத்துவதால் ஏற்படும் விபத்துகளை தடுப்பதற்காக முன்மாதிரியான ஒருபொறிமுறையொன்றை யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் வடிவமைத்துள்ளார்.

முப்பது வருடங்களாக மோட்டார் வாகன திருத்துநராக இருக்கும் கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த எட்வின் மொரிஸ் என்பவரே இந்தப் பொறிமுறையை வடிவமைத்துள்ளார்.

இதன்படி தலைக்கவசம் போடாமல் மோட்டார் சைக்கிளை இயக்க முடியாது. அதேவேளை தலைக்கவசத்தை போட்டாலும் தலைக்கவசத்தின் கொழுக்கிகளை மாட்டினால் மாத்திரமே மோட்டார் சைக்கிள் இயங்குமாறு அந்த பொறிமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தலைக்கவசத்தின் கொழுக்கிகளை கழற்றும்போது மோட்டார் சைக்கிள் நின்றுவிடுமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.



வீடியோவைக் காண...

மேற்படி பொறிமுறையில் சில பின்னடைவுகள் காணப்பட்டாலும் கூட இவ்வாறான ஒரு முன்மாதிரியான முயற்சியை வரவேற்பது அவசியமாகும்.

அந்த வகையில், இந்த பொறிமுறையை வடிவமைத்த எட்வின் மொரிஸை நாம் தொடர்புகொண்டபோது, தலைக்கவசம் போடாமல் ஏற்படுகின்ற மோட்டார் வாகன விபத்துகளை தவிர்ப்பதற்காக தான் இதனை ஐந்து வருடங்களுக்கு மேலாக முயற்சி செய்ததாகவும் தற்போது இதனை வெற்றிகரமாக செய்ய முடிந்ததாகவும் தெரிவித்தார்.

அதேவேளை, ஏனைய மோட்டார் சைக்கிள்களுக்கும் இந்தப் பொறிமுறையை செய்யும்பொழுது ஓரளவிற்கு மோட்டார் வாகனம் செலுத்துவதால் ஏற்படும் விபத்துகளை தடுக்க முடியும் என்றார்.





நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் நேற்று (29) கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. ஏப்ரல் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

# நடனம், சங்கீத பாடங்களுக்கான நடைமுறை பரீட்சைகள் ஆரம்பம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சங்கீதம் மற்றும் நடனம் ஆகிய பாடங்களை தெரிவு செய்த மாணவர்களுக்கான நடைமுறைப் பரீட்சை நேற்று (29) முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நடைமுறைப் பரீட்சைகள் ஏப்ரல் 08ஆம் திகதி வரை நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் என்.எம்.டீ. தர்மசேன தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை கடந்த மாதம் இடம்பெற்றிருந்ததுடன் அதனுடன் தொடர்புடைய நடைமுறைப் பரீட்சையே தற்போது இடம்பெற்று வருகின்றது.

இதுதொடர்பில் விளக்கமளித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

இம்முறை நடனத்துக்கு 11 ஆயிரத்து 894 மாணவர்களும், சங்கீதத்துக்கு ஆயிரத்து 864 பேரும் விண்ணப்பித்துள்ளனர். 136 மத்திய நிலையங்களில் நடைமுறைப் பரீட்சைகள் இடம்பெறுகின்றன.

இதுவரை அனுமதிப்பத்திரம் கிடைக்காத பரீட்சார்த்திகள் www.doenets.lk அல்லது https://onlineexams.gov.lk/onlineapps என்ற இணையத்தள முகவரியினூடாக பெற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

### அருண பத்திரிகை ஆசிரியருக்கு கொலை அச்சுறுத்தல் :

# தொலைபேசி அழைப்பு விபரங்களை வழங்க நிறுவனங்களுக்கு நீதிமன்றம் பணிப்பு

(எப். அஸ்லம்)

அருண பத்திரிகையின் செய்தி ஆசிரியர் சமிந்த சேனாரத்னவுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உள்நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி அழைப்புகள் தொடர்பான விபரங்களை பெற்றுத்தருமாறு சம்பந்தப்பட்ட தொலைத்தொடர்பு நிறுவனங்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று (29) உத்தரவிட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகள் நேற்று இடம்பெற்றபோது பதில் நீதவான் சந்திம லியனகே இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொலைபேசி இலக்கங்களிலிருந்து கடந்த 18ஆம் திகதி மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக அருண பத்திரிகையின் செய்தி ஆசிரியர் பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

இது தொடர்பில் விரிவான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபரால் கறுவாத்தோட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆலோக பண்டாரவுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்தனர்.

இந்த மரண அச்சுறுத்தல் குறித்து விரிவான விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதவான் பொலிஸாருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# மலசலகூட குழியிலிருந்து யுவதியின் சடலம் மீட்பு

### பாணந்துறையில் சம்பவம்



பாணந்துறை சுற்றுலா ஹோட்டலொன்றில் யுவதியொருவரை கொலை செய்து மலசலகூட குழிக்குள் போடப்பட்டுள்ளதாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய, பின்னவத்த பொலிஸாரினால் நேற்று (29) விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாணந்துறை, பின்வத்த கீல்ஸ் வீட்டுத்தொகுதி வீதியில் அமைந்துள்ள சுற்றுலா ஹோட்டலொன்றின் மலசலகூட குழியில் பெண்ணொருவரின் சடலம் இருப்பதாக அந்த ஹோட்டலின் உரிமையாளரினால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். குறித்த யுவதி, ஹோட்டல் முகாமையாளரினால் சில தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து பாணந்துறைக்கு அழைத்து வரப்பட்டதாகவும், இந்நிலையில் அந்த யுவதி அந்த ஹோட்டலிலுள்ள மேலும் இரு ஊழியர்களுடன் உறவை பேணி வந்துள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# கிம்புலாஎல குணாவின் பிரதான உதவியாளர் ஒருவர் கைது



இந்திய சிறையில் வைக்கப்பட்டுள்ள போதைப் பொருள் வியாபாரியான திட்டமிடப்பட்ட குற்றச்செயல்களுடன் தொடர்புடைய கிம்புலாஎல குணா என்பவரின் பிரதான உதவியாளர் ஒருவர் பல்வேறு வகையான போதைப்பொருட்கள் மற்றும் ஒருதொகைப் பணத்துடன் புளுமெண்டல் இப்பகேவத்த, ரெடிபானாஎல பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் விசேட சுற்றிவளைப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து 13 கிராம் ஹெரோயின் போதைப்பொருள், ஒரு கிராம் ஐஸ் போதைப்பொருள், 22 கிராம் கேரள கஞ்சா, 160 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், 27 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேலும், போதைப்பொருள் வியாபாரத்தில் ஈட்டப்பட்டதாக கருதப்படும் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 200 ரூபா பணம் மற்றும் 03 கைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

1999ஆம் ஆண்டு கொழும்பு நகரசபையின் மைதானத்தில் இடம்பெற்ற மக்கள் கூட்டத்தின்போது, அப்போதைய ஜனாதிபதி வேட்பாளர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் கிம்புலாஎல குணா என்பவர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



சமையல் எரிவாயுவை பெற்றுத்தருமாறு கோரி ஏறாவூர் பிரதேச செயலகத்துக்கு முன்பாக பொதுமக்கள் நேற்று (29) பாரிய ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

(படப்பிடிப்பு: ஏறாவூர் செய்தியாளர்)

## பெயர்மாற்றம்

**நுவரெலியா மாவட்ட அம்பகமுவ செயலாளர் பிரிவில் உள்ள சாமிமலை 320 /D பிரிவில் ஸ்ரஸ்ப்பி தோட்ட ஹோமிடெல் டிவிசனில் வசிக்கும் புண்ணியசீலன் சுதர்சன் (ஆண் )என எனது பிறப்பு சான்றிதழில் உள்ள பெயரை புண்ணியசீலன் சுதர்ஷினி (பெண்)என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக குடியரசுக்கும் இலங்கை வாழ் மக்களுக்கும் அறியதருகிறேன்.**

**கையொப்பம்**

**புண்ணியசீலன் சுதர்ஷினி**

# இரு வாகனங்கள் திடீர் தீப்பற்றல்

## வெவ்வேறு இடங்களில் சம்பவம்

நாட்டின் இருவேறு பிரதேசங்களில் நேற்றும் (29) இரு வாகனங்கள் திடீர் தீப்பற்றலுக்குள்ளாகியுள்ளன.

அதற்கமைய, கொழும்பு, சேதவத்த பிரதேசத்தில் நேற்று முச்சக்கரவண்டியொன்று திடீரென தீப்பற்றியுள்ளது. ஆனால், தீப்பற்றல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவ்விடத்திலிருந்த போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகளினால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதேவேளை, வாதுவ, மொறொத்துடுவ வீதியில் நேற்று மோட்டார் சைக்கிளொன்று திடீர் தீப்பற்றலுக்குள்ளாகியுள்ளது.

குறித்த மோட்டார் சைக்கிளில் வந்த நபர் உணவு அருந்துவதற்காக உணவகமொன்றுக்கு சென்றுள்ளதுடன் அதன்போதே இந்த தீப்பற்றல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எது எவ்வாறாயினும், இந்த திடீர் தீப்பற்றல்களுக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை.

## பெயர் மாற்றம்

**கம்பஹா மாவட்டம் இல. 109/C, அளுத்மாவத்தை, கல்லொழுவை, மினுவாங்கொடை என்னும் முகவரியைச் சேர்ந்த வேலாயுதன் ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை அப்துல் ரஹ்மான் என மாற்றிக்கொண்டுள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கைசனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.**



**2022 தேருநர் (வாக்காளர்) இடாப்பு கணக்கெடுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

2022 ஆம் ஆண்டிற்கான வாக்காளர்கள் கணக்கெடுப்பு 2022.02.01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளுக்கும் கணக்கெடுப்புப் படிவங்கள் விநியோகிக்கப்பட மாட்டாது.

2021 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்படாதிருப்பின் அல்லது 2021 ஆம் ஆண்டில் பதிவு தொடர்பான முகவரியில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ; 2004.01.31 அல்லது அதற்கு முன்னர் பிறந்த நபர்களை பதிவு செய்துகொள்வதற்காக

மற்றும்

**18 வயது பூர்த்தியடைந்தவுடனேயே 04 மாதங்களுக்கொரு முறை குறைநிரப்பு இடாப்பு ஊடாக வாக்குரிமையை**

பெற்றுக்கொள்வதற்காக 16 - 18 வயதுகளுக்கிடைப்பட்ட (2006.01.31 இற்கு முன்னர் பிறந்த) பிரஜைகளைப் பதிவு செய்து கொள்வதற்காக கிராம அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**தேர்தல் ஆணைக்குழு**

011-2868441 / www.elections.gov.lk



### நாற்திசையும் டயலொக் 2021 செயற்திட்டத்தினூடாக சமூகங்களுக்கான

# தொலைத் தொடர்பு இணைப்பை டயலொக் மேம்படுத்துகிறது

நாற்திசையும் டயலொக் 2021 செயற்திட்டத்தினூடாக 1028 கிராமங்கள் மற்றும் தொலைத்தூர கிராமப்புற சமூகங்களுக்கான தொலைத் தொடர்பு இணைப்பை டயலொக் மேம்படுத்துகிறது

453 புதிய 4G கோபுரங்கள் , 2021 இல் மொத்தமாக 4380 தொடர்பு கோபுரங்கள்

நாட்டின் ஒவ்வொரு முனையிலும் தொடர்பாடல் இணைப்பை விரிவுபடுத்துவதன் மூலம் இலங்கையர்களின் வாழ்வை வலுவூட்டுவதற்கும் வளப்படுத்துவதற்கும் தனது அர்ப்பணிப்பைத் தொடர்ந்து வழங்குமுகமாக, இலங்கையின் பரந்துபட்ட வலையமைப்பான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, தனது முன்முயற்சியின் மூலமாக நாற்திசையும் டயலொக் எனும் செயற்திட்டத்தை அறிவித்திருந்தது, அதற்கமைய 1028 கிராமங்கள் மற்றும் தொலைதூர கிராமங்களில் தொடர்பாடல் இணைப்பை வெற்றிகரமாக செயற்படுத்தியுள்ளது.

இந்த முயற்சியின் மற்றுமொரு முயற்சியாக களுத்துறை மாவட்டத்தில் யக்குபிட்டிய தொடர்பு கோபுரத்தை டயலொக் நிறுவனம் அண்மையில் ஆரம்பித்து வைத்தது. மேற்படி நாற்திசையும் டயலொக் செயற்திட்டமானது, எதிர்வரும் மாதங்களில் நாடு முழுவதும் கவரேஜ் திறனை மேம்படுத்தும் நோக்கில் மேலும் முன்னெடுக்கப்படவுள்ளது. இத்தகைய சவாலான காலகட்டத்தில் கவரேஜ் வசதிகளை தொடர்ந்து விரிவுபடுத்தியவாறு வாடிக்கையாளர்களின் தொடர்பாடல் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக தொடர்ச்சியாக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற டயலொக் நிறுவனம் 2021 ஆம் ஆண்டுக்குள் 3000 ற்கும் அதிகமான தொலைத்தொடர்பு கோபுரங்களில் செயற்திறனை மேலும் அதிகரித்து, 453 புதிய தொலைத்தொடர்பு கோபுரங்களை அமைத்துள்ளதுடன், டயலொக் வலையமைப்பினுள் 4380 4G மொபைல் கோபுரங்களை அமைத்துள்ளது. இலங்கையில் இதுவரை அமைக்கப்பட்ட அதிக எண்ணிக்கையிலான தொடர்பாடல் கோபுரங்கள் என்ற பெருமையையும் இது சேர்ப்பித்தது.

நாற்திசையும் டயலொக் செயற்திட்டத்தின் மூலம், கிராமப்புறங்களில் தொலைத்தொடர்பு இணைப்பின் தேவை மற்றும் ஓர் ஒன்றிணைந்த தேசமாக முன்னோக்கிச் செல்வதற்கு நாம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து முன்னெச்சரிக்கையுடன் ஒரு தேசிய மட்டத்திலான கலந்தாலோசனைகளை நாங்கள் நடத்துகிறோம்" என டயலொக் ஆசி ஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ தெரிவித்தார்.

டயலொக் வலையமைப்பின் கவரேஜ் வசதிகளை மேம்படுத்தலானது, வலையமைப்பு கண்காணிப்பில் ஈடுபடுகின்ற சர்வதேச கண்காணிப்பு நிறுவனங்களின் பாராட்டை பெற்றுள்ளதுடன், Tutela நிறுவனத்தினால் சிறந்த 4G கவரேஜ் கொண்ட வலையமைப்பு என டயலொக் பெயரிடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அடுத்து வரும் ஆறு மாதங்களில் மேலும் 200 தொடர்பாடல் கோபுரங்களை நிர்மாணித்து இலங்கையில் கவரேஜ் திறனை மேலும் மேம்படுத்துவதற்கு டயலொக் நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதியை அடைகையில் 95% க்கும் அதிகமான மக்கள் தொகையினருக்கு கவரேஜ் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் எதிர்பார்த்துள்ளது.



டயலொக் குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் குழுமத்தின் பிரதம தொழில்நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேதா, டயலொக் வலையமைப்பு சேவைகள் பிரிவின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக் பெர்ணான்டோ ஆகியோருடன் டயலொக் தொழிநுட்ப மற்றும் விற்பனை குழு உறுப்பினர்கள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட யக்குபிட்டிய கோபுரத்தின் அருகே குழுவாக எடுத்துக்கொண்ட படம்.



யக்குபிட்டிய கோபுரம் டயலொக் வலையமைப்பில் உத்தியோகபூர்வமாக இணைத்துக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பம். டயலொக் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் குழும பிரதம நிறைவேற்று தொழில்நுட்ப அதிகாரி பிரதீப் டி அல்மேதா, பாலிந்தநுவர பிரதேச செயலாளர் தர்ஷன ரணசிங்க மற்றும் டயலொக் வலையமைப்பு சேவைகள் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக் பெர்னாண்டோ ஆகியோரை காணலாம்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள வரலாறு காணாத பொருளாதார வீழ்ச்சி காரணமாக பெரும் நெருக்கடி நிலையில் அரசாங்கம் சிக்கியுள்ளது.

இந்நிலையில் எரிபொருள், எரிவாயு உட்பட அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதில் மக்கள் தொடர்ந்தும் திணறி வருகின்றனர். இலங்கைக் கடற்பரப்பில் அனைத்து விதமான பொருட்களுடன் பல கப்பல்கள் நங்கூரமிப்பட்டுள்ள போதிலும், அவற்றை இறக்கப் போதிய டொலர் இன்மையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பிராந்திய நாடான இந்தியாவின் பெரும் உதவியை இலங்கை அரசு நாடியுள்ளது. ஏற்கனவே பெருந்தொகையான கடன்களை யும், உதவிகளையும் பெற்றுள்ள இந்நிலையில், மீண்டும் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாகத் தருமாறு இலங்கை அரசாங்கம் இந்தியாவைக் கோரியுள்ளது. இலங்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக இந்த நிதி உதவி கோரப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஐந்தாவது பிம்ஸ்ரெக் சர்வதேச மாநாட்டில் பங்கேற்கும் நோக்கில் இலங்கை வந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்ஷங்கர் கொழும்பில் பல தரப்புகளுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

மறுபுறம் நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடியை காண்காணிக்கும் வகையில் இந்திய எண்ணெய் நிறுவனமான ஐ.ஓ.சி. எரிபொருள் விநியோக நிலையத்திற்கு விஜயம் மேற்கொண்டார். இதன்போது அங்குள்ள நெருக்கடி நிலைமைகள் குறித்தும் ஆராய்ந்துள்ளார்.

இது குறித்து சிங்கள மக்கள் சமூக ஊடகங்களில் தமது கருத்தினை வெளியிட்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களாக நாட்டு மக்கள் எரிபொருள், எரிவாயுவைப் பெற்றுக்கொள்வதில் திணறி வருகின்றனர். நீண்ட வரிசையில் காத்திருந்து அதனைப் பெற்றுக்கொள்கின்றனர். இவ்வாறு மக்கள் அசௌகரியங்களை முகங்கொடுத்துள்ள நிலையில், எந்தவொரு அமைச்சரும் சம்பவ இடத்திற்கு வந்து மக்களின் கஷ்டங்களை கண்டுகொள்ளவில்லை என மக்கள் ஆதங்கம் வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில், இந்திய அமைச்சர் ஒருவர் இலங்கையிலுள்ள நெருக்கடி நிலைமை குறித்து ஆராய்வது, இந்தியாவின் மாநிலமாக இலங்கையும் மாறியுள்ளதா என்பது தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் தென்னிலங்கை மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையில் பேராதனை வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை இடைநிறுத்தமென செய்தியொன்று வெளிவந்த கையோடு அதனை உடனடியாகக் கவனிக்குமாறு கொழும்பிலுள்ள தூதுவரை பணித்திருக்கிறார் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்ஷங்கர்.

நேற்று முன்தினம் எரிபொருள் நிலையத்துக்குப் போய் அமைச்சர் காமினி லொக்குகே செய்ய வேண்டிய வேலைகளை செய்த ஜெய்ஷங்கர், நேற்று பேராதனை வைத்தியசாலைக்கு உதவி வழங்கக் கூறி அமைச்சர் கெஹேலிய செய்ய வேண்டிய வேலைகளையும் செய்திருக்கிறார். கொழும்பில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்த அமைச்சர் ஜெய்ஷங்கர், அவர்களின் கருத்தையும் கேட்டறிந்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியினால் தடுமாறிக்கொண்டிருந்த இலங்கையின் கவலைகளைக் கேட்டு, அதற்கு கைகொடுத்து சீனாவின் வசத்தில் சிக்குண்டிருந்த இலங்கையை தனது பக்கம் இலாவகமாக திருப்பியிருக்கிறது இந்தியா. இனிமேல் நினைத்தாலும் கூட சீனாவுடன் செல்லும் நிலையில் கொழும்பு இல்லை. அதேபோல் இனி இலங்கையின் தற்போதைய ஆட்சியாளர்களைக் கருவறுக்கும் வேலைகளை சீனா படிப்படியாக ஆரம்பிக்குமென நம்பலாம்.

இந்தியாவின் மோடி அரசு, இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்தை கணிசமாகக் குறைத்துள்ளது. கடந்த ஒருவருட காலத்தில் இலங்கையில், இந்தியா மேற்கொண்ட இராஜதந்திர காய் நகர்த்தல்களே அதற்குக் காரணம்.

கடந்த ஆண்டு சீனாவினால் மேற்கொள்ளப்படவிருந்து, கொழும்பினால் விடுவிக்கப்பட்ட கலப்பு மின் திட்டங்களை இப்போது இந்தியா யாழ்ப்பாணத்திலிலுள்ள மூன்று தீவுகளில் அமைக்கவுள்ளது.

இத்திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கடந்த திங்கட்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்ஷங்கர் மற்றும் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் ஆகியோருக்கிடையே நடந்த சந்திப்பின்போது கையெழுத்திடப்பட்டது. கிழக்கு மாகாணம் சம்பூரில் தேசிய அனல் மின் கழகத்தின் சூரியசக்தி மற்றும் வடக்கில் மன்னார் மற்றும் பூநகரியில் அதானி குழுமத்தின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கான சமீபத்திய ஒப்பந்தங்களுக்குப் பிறகு, இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் வரும் மூன்றாவது இந்திய மின்சக்தித் திட்டம் இதுவாகும்.

Follow us

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, மார்ச் 30ஆம் திகதி, புதன்கிழமை

# இலங்கைக்குள் நுழைந்த இந்தியா!

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆதரவுடன் சீன நிறுவனமான சினோசோர்எடெக்வினுக்கு நயினாதீவு, ஊர்காவற்றுறை அல்லது நெடுந்தீவு மற்றும் அனலைதீவு தீவுகளில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை சீனாவுக்கு வழங்க இலங்கையின் அமைச்சரவை கடந்த 2021 ஜனவரியில் முடிவு செய்தது.

தமிழ்நாட்டிலிருந்து 50 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பாக்.ஜலசந்தியில் சீனத் திட்டம் வருவதைப் பற்றி இலங்கைத் தரப்பிற்கு அப்போது இந்தியா உடனடியாக கவலை தெரிவித்தது. பின்னர் அதே திட்டத்தை கடனல்லாத மானியத்துடன் செயற்படுத்த புதுடில்லி முன்வந்தது. இதனால் ஒரு வருடத்திற்கும் மேலாக இதில் ஒரு பக்கத்தைத் தேர்ந்தெடுக்க முடியாமல், திட்டத்தை இடைநிறுத்தியது இலங்கை. பின்னர் வெளிப்படையாக சீனாவைத் தள்ளி வைத்தது கொழும்பு. கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் கூட, இலங்கையின் இந்த செயற்பாடு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தவறான செய்தியை அனுப்பியதாக தெரிவித்திருந்தார்.

இதற்கிடையில், இந்தியாவும், இலங்கையும் கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்தை (M.R.C.C.) அமைக்க ஒப்புக்கொண்டுள்ளன. இது அண்டை நாடுகளுக்கிடையே அதிக பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பைக் குறிக்கிறது. பாரத் எலெக்ட்ரொனிக்ஸ் மற்றும் 6 மில்லியன் டொலர் இந்திய மானியத்தை உள்ளடக்கிய இந்த முயற்சி கடந்த வாரம் அமைச்சரவையின் ஒப்புதல் பெற்றது.

வடமாகாணத்தில் பருத்தித்துறை, பேசாலை, குருநகர் மற்றும் தலைநகர் கொழும்பிற்கு தெற்கேயுள்ள பலப்பிட்டி ஆகிய இடங்களில் உள்ள மீன்பிடி துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்கும், தெற்கு காலி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு கணினி ஆய்வகங்கள் மற்றும் ஸ்மார்ட் போர்டுகளை வழங்குவதற்கும் இந்தியா உதவவுள்ளது. இலங்கையின் பிரத்தியேக டிஜிட்டல் அடையாள அட்டைத் திட்டம் மற்றும் இராஜதந்திர பயிற்சிகளுக்கான ஒத்துழைப்பும் மேற்கொள்ளப்படவுள்ளன.

சீனாவுடனான அதிகளவு ஒத்துழைப்பு காரணமாக இலங்கையின் இப்போதைய ஆட்சியாளர்களை இந்த ஆட்சியின் முற்பகுதியில் சற்று வெறுத்திருந்த இந்தியா, இப்போது அந்த நிலைமையினை மாற்றி மிகவும் நெருக்கமாகியுள்ளது. இந்தியாவின் இந்த நெருக்கத்திற்கு அதன் வெளியுறவு அமைச்சர் ஜெய்ஷங்கர் முக்கியமான காரணி. ஒரு காலத்தில் இலங்கையின் தூதரகத்தில் பணிபுரிந்த அவருக்கு இலங்கைக்கு எங்கே அடித்தால் எங்கே நெறிகட்டும் என்பது நன்றாகவே தெரியும். கொழும்பில் அவர் வீதியிலிறங்கி எரிபொருள் நிலையத்துக்கு சென்றதும், வைத்தியசாலை தேவைக்கு உடனடியாக உதவ முன்வந்தமையும் இலேசான விடயங்கள் அல்ல. அதற்குள் காத்திரமான செய்திகள் ஒளிந்துள்ளன. இந்தியா மட்டுமே ஆபத்பாந்தவன் என்பது கொழும்புக்கு தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் இந்த நெருக்கத்தைப் பார்த்து சீனா வாளாவிருக்காது. கொழும்பு அரசியலை குழப்பும் வகையில் அது தனது பங்குக்கு எதையாவது செய்யும். ஆனாலும், இப்போதைய நிலைமையில் இலங்கைக்கு கைகொடுத்து இலங்கையுடன் மிக நெருங்கியது மட்டுமல்லாமல் சீனாவையும் ஓரங்கட்டியுள்ளது இந்தியா. எப்படிப் பார்த்தாலும் வெற்றி இந்தியாவுக்குத்தான்.

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

**2 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள் பின்வருமாறு:**




**01. விவசாய மற்றும் ஏனைய துறைகளில் தொழில் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை ஊக்குவிப்பதற்காக ஜப்பான் எஹிம் மாநிலத்துடன் கூட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்**

ஜப்பான் எஹிம் மாநிலத்தில் விவசாயம், உணவுப் பதனிடல் உள்ளிட்ட ஏனைய தொழிற்துறைகளில் குறிப்பாக அப்பிரதேசத்தில் வியாபித்துள்ள சிற்ரஸ் (Citrus) பயிரிடல் துறையில் காணப்படும் தொழில்களில் ஈடுபடுவதற்காக இலங்கையின் தொழில்நுட்ப பயிலுநர்களுக்கு வாய்ப்புகளை வழங்குவதற்காக குறித்த மாநிலத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுக்கமைய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு 2021.07.26 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது. அதற்கமைய, விசேட திறன்களுடன் கூடிய இலங்கையர்களுக்கு அத்தகைய தொழில் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்கும் நோக்கில் வெளிநாட்டு தொழில் ஊக்குவிப்புகள், சந்தைப் பன்முகப்படுத்தல் இராஜாங்க அமைச்சு மற்றும் ஜப்பான் எஹிம் மாநிலத்திற்கும் இடையில் கூட்டு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்காக தொழில் உறவுகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி சார்ந்த, விஞ்ஞானம் சார்ந்த மற்றும் கலாசாரம் சார்ந்த அமைப்பின் (யுனெஸ்கோ அமைப்பு) கீழ் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெண் விஞ்ஞானிகளுக்காக ஆராய்ச்சி வழங்கல்களுக்கான கூட்டு ஒப்பந்தங்களை மேற்கொள்ளல்**

ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாசாரம் சார்ந்த அமைப்பின் (யுனெஸ்கோ அமைப்பு) கீழ் இயங்கும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பெண் விஞ்ஞானிகளுக்கான அமைப்பினால் செயற்படுத்தப்படும் அடிப்படை தொழில்வாண்மை கூட்டு வேலைத்திட்டம் இற்குப் பொருத்தமான ஆய்வுக் கருத்திட்டமாகக் கருதி ஆய்வு ஒதுக்கீடுகளை வழங்குவதற்காக ஐந்து (05) இலங்கை பெண் விஞ்ஞானிகளின் ஆய்வுகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. அதற்கமைய, அத்தகைய ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக குறித்த பெண் விஞ்ஞானிகள் பணிபுரியும் பல்கலைக்கழகங்கள் மற்றும் யுனெஸ்கோ அமைப்புக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும், குறித்த பெண் விஞ்ஞானிகள் மற்றும் யுனெஸ்கோ அமைப்புக்கும் இடையிலான ஒதுக்கீட்டு ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கும் கல்வியமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தில் ஏற்பட்ட நீர்க்கசிவினால் பாதிப்புக்குள்ளாகிய வீட்டுரிமையாளர்களுக்கு உரித்தாகும் நிவாரணங்களை வழங்குதலும் கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகளை வழங்கலும்**

உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் அனைத்துக் கட்டுமானங்களும் தற்போது நிறைவடைந்து வருவதுடன், இக்கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பினர்களுக்கு நிவாரணங்களை வழங்குதலை எதிர்வரும் 06 மாதங்களில் நிறைவு செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தின் சுரங்க அகழ்வின்போது ஏற்பட்ட நீர்க்கசிவினால் பாதிக்கப்பட்டுள்ள வீட்டுரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாற்றுக் காணிகளுக்கான அரச காணிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி விடுவிப்பு வழங்கல் பத்திரங்களை வழங்குவதற்கும், மண்சரிவு அச்சுறுத்தல் காரணமாக தேசிய கட்டட ஆராய்ச்சிகள் நிறுவனத்தால் அகற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதும், முழுமையாக இழப்பீடு வழங்க வேண்டியதுமான வீடுகளுக்கு துரிதமான இழப்பீட்டை வழங்குவதற்கும், மீளவும் குடியமர்த்தப்பட வேண்டிய வீட்டுரிமையாளர்களின் காணிகளில் திட்டவட்டமான நிபந்தனைகளின் கீழ் பயிரிடுவதற்கான வாய்ப்புகளை ஏற்பாடு செய்து வழங்குவதற்கும், நீர்ப்பாசன அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. டிஜிட்டல் அரசுக்கான மின்னஞ்சல் மற்றும் கூட்டு நெறிமுறை**

தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகமொன்றை ( Smart Nation) உருவாக்குவதே தேசிய கொள்கைச் சட்டகத்தின் நோக்கமாகும். அதன்கீழ் மக்களை மையமாகக் கொண்ட டிஜிட்டல் அரசை ஸ்தாபித்தல், டிஜிட்டல் முறையில் வலுவூட்டப்பட்ட பொருளாதாரத்தை உருவாக்கல் போன்றன அரசின் தொலைநோக்கை வெற்றியடையச் செய்யும் மூலோபாயங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளன. அதற்கமைய, அரச அலுவலகங்களில் பயன்பாட்டுக்காக சமகால தேவைகளுக்குப் பொருத்தமான வகையில் இயலளவை அதிகரித்துக் - குறைக்கக் கூடியவாறான பாதுகாப்பான தொடர்பாடல் பணித்தளமொன்றை (Communication Platform) உருவாக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டு மற்றும் விசேடமாக அரசதுறைப் பாவனைக்காக விரிவாக்கம் செய்யப்பட்ட கூட்டான மின்னஞ்சல் பணித்தளத்தை ( E-mail and Collaboration Platform ) செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களுக்கான 100,000 கூட்டான மின்னஞ்சல் பணித்தளப் பாவனையாளர் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும், அதன் முதற்கட்டமாக 30,000 மின்னஞ்சல் பணித்தளப் பாவனையாளர் கணக்குகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தொழில்நுட்ப அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. பற்சிகிச்சைகளுக்குத் தேவையான உபயோகப் பொருட்களை விநியோகிப்பதற்கான பெறுகை வழங்கல்**

நோயாளர்களின் பற்சிகிச்சைகளுக்குப் பயன்படுத்தப்படும் உபயோகப் பொருட்களை விநியோகிப்பதற்கான சர்வதேச போட்டி விலைமுறிப் பெறுகை கோரப்பட்டுள்ளதுடன், அதற்காக 09 விலைமுறிகள் கிடைத்துள்ளன. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழு, விபரங்களுடன் கூடியதாக பதிலளித்துள்ள குறைந்த விலைமனுக் கொண்ட விலைமுறிதாரர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைகளுக்கமைய குறித்த பெறுகைகளை வழங்குவதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக 2017 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்**

2021 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய வெளிநாட்டு செலாவணிச் சட்டம் உள்ளிட்ட தற்போது நாட்டில் அமுலிலுள்ள சட்டங்களிலிருந்து விடுவித்தல் அல்லது ஊக்குவிப்புகளை குறித்தொதுக்கி வழங்குவதற்காக கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. குறித்த ஆணைக்குழு தேவையான சட்டங்கள் மற்றும் கட்டளைகளை பிரகடனப்படுத்தும் வரைக்கும் கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுவின் அதிகார எல்லைக்குள் முதலீடுகளுக்கான வசதியளிப்புக்களை மேற்கொள்வதற்காக வேறானதொரு பொறிமுறையை அறிமுகப்படுத்தி வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் பிரகாரம் தேவையான ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டளைகளை வெளியிடுமாறு ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வேண்டுகோளுக்கு, இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை அனுமதி வழங்கியுள்ளது. அதற்கமைய, 2017 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க வெளிநாட்டு செலாவணிச் சட்டத்தின் 7(1) இன் ஏற்பாடுகளுக்கமைய கட்டளைகளை வெளியிடுவதற்கும், குறித்த கட்டளைகளை நாடாளுமன்ற அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிப்பதற்கும் நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் IV ஆம் உறுப்புரையின் கீழ் 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தல்**

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தத்தின் IV ஆம் உறுப்புரையின் கீழ் இலங்கை தொடர்பாக 2021 ஆம் ஆண்டுக்கான அறிக்கை 2022.03.25 அன்று வெளியிடப்பட்டுள்ளது. குறித்த அறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவைத் தீர்மான ஆவணம், தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)**

## தவக்கால சிந்தனை




### தந்தையைப்போல!

"நூலைப்போல சேலை, தாயைப்போல பிள்ளை" என்பது பழமொழி. ஆனால், இயேசு தந்தையைப்போல வாழ்ந்தார், தந்தையைப்போல செயலாற்றினார். எனவேதான், அவர் ஓய்வுநாள் சட்டத்தை மீறியபோது, "என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார். நானும் செயலாற்றுகிறேன்" என்று கூறினார்.

வானகத் தந்தைக்கு ஓய்வு தேவையில்லை. அவர் ஓய்வின்றி தமது பேரன்பை, இரக்கத்தை நம் மீது பொழிந்துகொண்டிருக்கிறார். இயேசுவும் ஓய்வின்றி உழைத்தார். ஓய்வுநாளிலும் நோயாளர்களைக் குணமாக்கினார். பாவிகளை மன்னித்தார். நன்மை செய்வதற்கு ஏது ஓய்வு?

ஆண்டவர் இயேசுவைப் பின்பற்றி, நாமும் தந்தையைப்போல வாழ்வோம். "உங்கள் வானகத் தந்தை நிறைவுள்ளவராக இருப்பதுபோல, நீங்களும் நிறைவுள்ளவராக வாழுங்கள்" என்னும் வாக்கிற்கேற்ப நாமும் நிறைவுள்ளவர்களாக வாழ்வோம். தந்தை ஓய்வின்றி இரக்கம் பொழிவதுபோல, நாமும் பரிவின் செயல்களை, அன்புச் செயல்களை ஓய்வின்றி செயற்படுத்துவோம்.

## நக்கல் நமசிவாயம்

**இந்திய மினிஸ்டர் இன்னும் ரெண்டு நாளைக்கு ஸ்ரீலங்காவில இருந்தால் கொஞ்சம் பிரச்சினைகள் தீரும்போல..!**



## இன்றைய நாளில்...

- 1818 – இயற்பியலாளர் அகஸ்டீன் பிரெனெல் ஒளியியல் சுழற்சி பற்றிய தனது குறிப்புகளை பிரெஞ்சு அறிவியல் கழகத்தில் படித்தார்.
- 1831 – யாழ்ப்பாணம், மானிப்பாயில் அமெரிக்க மிஷன் கட்டடங்கள் தீப்பிடித்து அழிந்தன.
- 1842 – அறுவைச் சிகிச்சைகளில் முதன் முதலாக ஈதர் மயக்க மருந்து, குரோபோர்ட் லோங் என்பவரினால் பயன்படுத்தப்பட்டது.
- 1858 – அழிப்பானுடன் கூடிய எழுதுகோலுக்கான காப்புரிமம் ஐமன் லிப்மன் என்பவரினால் பெறப்பட்டது.
- 1861 – சேர் வில்லியம் குரூக்ஸ் தாலியம் தனிமத்தைக் கண்டுபிடித்தார்.
- 1981 – அமெரிக்க ஜனாதிபதி ரொனல்ட் ரேகன் வொஷிங்டனில் உணவு விடுதி ஒன்றில் வைத்து, ஜோன் இங்கிளி என்பவனால் மார்பில் சுடப்பட்டார். இதன்போது மேலும் மூவர் காயமடைந்தனர்.
- 1982 – கொலம்பியா விண்ணோடம் நியூ மெக்சிக்கோவில் வெற்றிகரமாகத் தரையிறங்கியது.

# சவூதி அபிவிருத்தி நிதியத்தின் உதவி இலங்கைக்கு தொடர்ந்து வழங்கப்படும்

## ஜனாதிபதி கோட்டாவிடம் தூதுவர் உறுதி

இலங்கைக்கான சவூதி அபிவிருத்தி நிதியத்தின் உதவிகளைத் தொடர்ந்தும் வழங்க உத்தேசித்துள்ளதாக இலங்கைக்கான சவூதி தூதுவர் அப்துல் நாசர் ஹூசைன் அல் ஹார்தி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

தனது சேவைக் காலத்தை முடித்துக் கொண்டு இந்நாட்டில் இருந்து வெளியேறிச் செல்லும் அப்துல் நாசர் நேற்று (29) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியைச் சந்தித்தபோதே இதனைத் தெரிவித்தார்.

ஹூசைன் அல் ஹார்தியின் பதவிக்காலத்தில் அவர் வழங்கிய ஒத்துழைப்பிற்காக ஜனாதிபதி அவரைப் பாராட்டினார்.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தி துறையில் முதலீடு மற்றும் இலங்கையில் உள்ள ஏனைய முதலீட்டு வாய்ப்புகள் குறித்து ஆராய்வதற்காக சவூதி அரேபிய உயர்மட்டக் குழுவொன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக ஹார்தி தெரிவித்தார்.

முதலீட்டு வலயங்களுடன் தொடர்புடைய பல சிறப்பு வரிச் சலுகைகள் உள்ளன. மருந்து, தொழில்நுட்பம் மற்றும் ஆடைத்தொழில் துறைகளில் நேரடி முதலீட்டிற்கான பரந்த வாய்ப்புகள் இலங்கையில் இருப்பதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்புத் துறைமுக நகர் மற்றும் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிர்மாணிக்கப்படவுள்ள உத்தேச கப்பல் பழுதுபார்ப்பு மற்றும் உற்பத்தி நிறுவனத்துடன் தொடர்புடைய முதலீட்டு வாய்ப்புகளில் முதலீடு செய்யுமாறு சவூதி அரசாங்கத்திற்கு அழைப்பு விடுத்த ஜனாதிபதி, சவூதி அபிவிருத்தி நிதியத்தின் மூலம் இந்நாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கு வழங்கிய உதவிக்கும் நன்றி தெரிவித்தார்.





ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் சவூதி அரேபியாவின் இந்நாட்டுக்கான பிரதித் தூதுவர் அப்துல்லாஹ் ஏ.ஆர்.கோபி ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# இந்திய வெளிவிவகார அமைச்சருடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் பேச்சு

## மீனவர் பிரச்சினை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் ஆராய்வு



தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை தீர்ப்பதற்கான சிறந்த ஆரம்பமாக மாகாண சபை முறைமையே சிறந்த ஆரம்பம் என்ற தனது வழிமுறையை தமிழ்த் தரப்புகள் ஏற்றுக்கொண்டிருப்பதை வரவேற்பதாக தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடக்கு கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை அபிவிருத்தி உட்பட பல திட்டங்களுக்கான கோரிக்கைகளையும் இந்தியாவிடம் முன்வைத்துள்ளார்.

மேலும், தமிழ் மக்களின் கலாசார விழுமியங் களையும் பாரம்பரியங்களையும் பாதுகாத்து வளர்த்தெடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் நவீன வசதிகள் அடங்கிய கலாசார நிலையத்தினை அமைத்து தந்தமைக்காக இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய மக்களுக்கும் இலங்கை தமிழ் மக்கள் சார்பான தனது நன்றியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெய்ஷங்கர் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பருத்தித்துறை மற்றும் பால்சேனை உட்பட வடக்கு கிழக்கு பகுதிகளில் மீன்பிடித் துறைமுகங்களை அமைத்து தருவதற்கு ஏற்கனவே இந்தியா சம்மதம் தெரிவித்துள்ள நிலையில், இலங்கை கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றை தீர்ப்பதற்கு இந்தியாவினால் மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக இரண்டு நாடுகளினதும் அமைச்சர்கள் இச் சந்திப்பின் போது விரிவாக ஆராய்ந்தனர்.

குறிப்பாக, இந்திய கடற்றொழிலாளர் விவகாரம் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. இதன்போது, இரண்டு நாட்டு கடற்றொழிலாளர்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் கச்சதீவில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு தொடர்பாக எடுத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அண்மையில் இடம்பெற்ற அதிகாரிகள் மட்டக் கலந்துரையாடலும் பயனுள்ளதாக அமைந்திருந்தமையை சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான பேச்சுவார்த்தைகளை வினைத் திறனாக தொடர்ந்தும் மேற்கொள்வதன் ஊடாக, குறித்த விவகாரத்திற்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வினை அடைய முடியுமென இரண்டு நாடுகளின் அமைச்சர்களும் நம்பிக்கை வெளியிட்டனர்.

அத்துடன், வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை தொடர்பான சுமார் 23 திட்டங்களை இந்திய வெளியுறவு அமைச்சரிடம் முன்வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மேலதிக திட்டங்கள் தொடர்பான எதிர்பார்ப்புகளையும் வெளியிட்டார்.

அவையாவன,

★ வடகடல் நிறுவனத்தின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு கடன் திட்டத்தின் அடிப்படையில் 100 மில்லியன் பெறுமதியான மூலப் பொருட்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்.

★ காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத் திற்கும் இடையிலான சரக்கு கப்பல் போக்குவரத்து.

★ காங்கேசன்துறைக்கும் இராமேஸ்வரம் மற்றும் பண்டிச்சேரி இடையிலான பயணிகள் படகுச் சேவை.

★ பலாலி - திருச்சி இடையிலான விமானப் போக்குவரத்து சேவை.

★ காரைநகரில் அமைந்துள்ள சீநோர் படகு கட்டும் தொழிற்சாலையை செயற்படுத்துவதற்கு இந்திய முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்ளுதல்.

அதேவேளை, அரசியல் தீர்வு விடயத்தில், 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாணசபை முறைமையை முழுமையாக அமுல்படுத்துவதில் இருந்து ஆரம்பித்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை அடைய முடியும் என்று, கடந்த 30 வருடங்களுக்கும் அதிகமாக தான் வலியுறுத்தி வருகின்ற நிலைப்பாட்டிற்கு, காலம் கடந்தாயினும் ஏனைய தமிழர் தரப்புகள் வந்திருப்பதை வரவேற்பதாக தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, காணி விடுவிப்பு, அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல்போன உறவுகளுக்கான பரிகாரம், அபிவிருத்தி போன்றவை தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் மற்றும் நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ உட்பட்ட சக அமைச்சர்கள் ஆகியோருடன் கலந்துரையாடி, தன்னால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தத்துவம் தங்கராசு



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய பேட்டியின்போது இனிமேலும் இந்த நாட்டில் இனவாதம் பேசுவதில் அர்த்தமில்லை என்கிறார்.

இப்போதுள்ள பிரச்சினைகளுக்கு அவரும் ஒரு காரணம் அல்லவா ?

ஒருகாலத்தில் புலிகளை பலவீனப்படுத் தவேண்டுமென நினைத்து அவர்களை பிரித்தார்.கடைசியில் தனது கட்சியில் எல்லோரும் பிரிந்து சென்று இப்போது தனியே ஒரு எம்.பியாக இருக்கிறார்.

இனவாதம் பேசக்கூடாதென்று சொல்லும் ரணில் ,தனது கட்சியின் இனவாத செயற்பட்டால் இந்நாட்டிற்கு ஏற்பட்ட சாபக்கேட்டிற்கு எப்போதாவது பகிரங்க மன்னிப்புக் கோரியிருக்கிறாரா?

இனவாதம் நாட்டில் இருக்க பிரதான காரணமே ரணிலும் அவரின் கட்சியும்தான்...

## ஸ்ரீ லங்கா மஹ பெங்குவ / இலங்கை மத்திய வங்கி / CENTRAL BANK OF SRI LANKA — 29.03.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 104 3 28 | 114 6621 |
| கனேடியன் டொலர் | 12 362 | 13 5276 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 34 1 30 | 36 2038 |
| யூரோ | 21 2355 | 220 5 56 |
| ஜப்பான் யென் | 1 2247 | 1 3252 |
| சிங்கப்பூர் டொலர் | 102 422 | 110 11 0 |
| ஸ்ரேலிங் பவுன் | 267 8235 | 282 2062 |
| சுவிஸ் பிராங் | 2 8 3174 | 211 2 04 |
| ஐ.அ.டொலர் | 177 6364 | 187 8847 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 671 2680 |
| குவைட் | குவைட் தினார் | 857 8 78 |
| ஓமான் | ஓமான் றியால் | 655 072 |
| கட்டார் | கட்டார் றியால் | 7 8207 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 67 520 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 7 20 4 |

# பசுமை இலங்கை எனும் தொனிப்பொருளில் மரம் நாட்டும் நிகழ்வு பம்பலப்பிட்டியில்



ஜனாதிபதி, பிரதமரின் ஆலோசனைக்கமைய பசுமை இலங்கை எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் மரக்கன்றுகள் நடும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இதற்கமைய நாடளாவிய ரீதியிலுள்ள கோயில்களிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த காணி அமைச்சு அறிவுறுத்தியுள்ளது. இதனை செயற்படுத்தும் நடைமுறைப்படுத்தும் வகையில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்துள்ள நிலையில், நேற்று செவ்வாய்க்கிழமை (29) சகல கோவில்களிலும் குறைந்தது ஒரு மரக்கன்றையாவது நாட்டுமாறு கோயில் நிர்வாகங்களை கேட்டுள்ளது.

இதனை ஆரம்பித்து வைக்கும் வகையில் நேற்றுக் காலை 9.18மணிக்கு பம்பலப்பிட்டி வஜீரா கோயில் வளாகத்தில் மரக்கன்றுகள் நாட்டும் நிகழ்வு பிரதமரின் இந்து சமய விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர பாபுசர்மா குருக்கள் முன்னிலையில் நடைபெற்றது.

ஆலயத்தின் குருமார்களான சிவஸ்ரீ சச்சிதானந்தம் மற்றும் சிவஸ்ரீ சிவகுமார் ஆகியோர் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டதன் பின் மரநடுகைத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பிரதமரின் இணைப்பாளர் பாபுசர்மா குருக்கள், ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த வி.கந்தசாமி, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பவானி முகுந்தன் உள்ளிட்ட அதிகாரிகள், ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் பசுமை இலங்கையின் எண்ணக்கருவுக்கு அமைய ஆலயங்களில் வீட்டுத் தோட்ட மர நடுகை நிகழ்வு நேற்று(29) தேசிய ரீதியில் இந்து கலாசாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதனை கொழும்பு பம்பலப்பிட்டி வஜீரா பிள்ளையார் ஆலய பிரதம குரு சச்சிதானந்த குருக்கள், சிவகுமார் குருக்கள், ஆலய நிர்வாகி மற்றும் பிரதமரின் இந்துமத இணைப்பாளர் சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பவானி முகுந்தன் ஆகியோர் கலந்துகொண்டு இந்த மர நடுகை வைபவத்தை ஆரம்பித்து வைத்தனர்.

# பிம்ஸ்டெக் மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள்















பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி (பிம்ஸ்டெக்) மாநாட்டின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (29) நடைபெற்றன. (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

# நான் உயிரோடு இருக்கும்வரை ஓர் அங்குல நிலமேனும் வெளியாட்களுக்கு பகிர்ந்தளிக்க இடளிக்கமாட்டேன்

## தேயிலைத் தோட்டங்களை தனியாருக்கு கொடுக்கும் சூழ்ச்சிக்கு எதிராக வடிவேல் சுரேஷ் எம்.பி. சபதம்





''பெருந்தோட்டத் தேயிலைத் தோட்டங்களை வெளியாருக்கு பகிர்ந்தளிக்கும் கபடநாடக சூழ்ச்சி, மீண்டும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. வடிவேல் சுரேஷ் என்ற நான் உயிரோடு இருக்கும் மட்டும் ஓர் அங்குல நிலமேனும் வெளியாட்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு இடம் கொடுக்கமாட்டேன்'' - என பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்க மகளிர் தினக் கொண்டாட்டங்கள் பதுளை, சார்ணியா பெருந்தோட்ட சனசமூக நிலையத்திலும் ஹப்புத்தளை இந்துக் கலாசார மண்டபத்திலும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சங்கத்தின் பொதுச் செயலாளரும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவு அமைப்பாளர் ஹிருணிகா பிரேமசந்திர ஆகியோர் வரவேற்கப்பட்டனர்.

இதனையடுத்து அங்கு உரையாற்றிய சங்கத்தின் பொதுச் செயலாளரும், பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ்,

''ஒரு சமூகத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காளர்கள் பெண்களேயாவர். ஒரு நாட்டையும், வீட்டையும் ஆளுமையுடன் நிர்வாகிக்கும் தனித்திறமை பெண்களுக்கே காணப்படுகின்றது. ஆண்கள் உடலளவில் பலம் பொருந்தியவர்களாக இருந்த போதிலும், மனதளவில் பலம் பொருந்தியவர்கள் பெண்களேயாகும். பெண்களின் வகிபங்கு அரசியலில் மிக முக்கியமானதொன்றாகும்.

இம்முறை ஊவா மண்ணிலிருந்து நாடாளுமன்றத்திற்கும், மாகாண சபைகளுக்கும், பிரதேச சபைகளுக்கும் பெண் வேட்பாளர்கள் களமிறங்க வேண்டும். மலையக அரசியலில் புதியதொரு மாற்றத்தை நாம் கொண்டுவருவோம். மலையகப் பெருந்தோட்டப் பெண்கள் அட்டை மற்றும் விஷஜந்துக்களின் கடிக்கு மத்தியில் நாட்டினதும், வீட்டினதும், பொருளாதாரத்தை மேம்படுத்த, சுமக்க முடியாத சுமையை முதுகில் சுமந்து கொண்டிருக்கின்றார்கள். ஒரு தாய் பத்து மாதக் குழந்தையை கருவில் சுமப்பதுபோன்று, பல வருடங்களாக தேயிலைத் தளிர்க் கூடைகளை முதுகில் சுமந்தபடி, வெயிலிலும், மழையிலும் குளிரிலும் பல இன்னல்களுக்கு மத்தியில், எங்கள் மலையகத் தாய்மார்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள்.

அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவினாலும் குறைவான வருமானத்தினாலும், பெருந்தோட்ட நிர்வாகங்களின் அடாவடிச் செயற்பாடுகளினாலும் பெரும் பாதிப்புக்குள்ளாகி இருப்பதும், மலையகப் பெருந்தோட்டப் பெண்களேயாவர். அவர்களுடைய உரிமைகளை மீட்டெடுக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து, செயல்பட வேண்டியது அவசியமானது.

மேலும், பெருந்தோட்டத் தேயிலைத் தோட்டங்களை வெளியாருக்கு பகிர்ந்தளிக்கும் கபடநாடக சூழ்ச்சி, மீண்டும் அரங்கேறிக்கொண்டிருக்கின்றது. வடிவேல் சுரேஷ் என்ற நான் உயிரோடு இருக்கும் மட்டும், ஓர் அங்குல நிலமேனும் வெளியாட்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு இடங்கொடுக்கமாட்டேன். காடுகளாக இருந்த நிலங்களை, பதப்படுத்தி, பொன் விளையும் பூமிகளாக மாற்றிய பெருமை மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களயே சாரும். பல வருடங்களாக பரம்பரையாக அவர்களுடைய பாரியதொரு முயற்சியே, சிலோன் ரீயின் நம்பகத்தன்மையாகும். இதை யாரும் மறுக்கவும், மறைக்கவும் முடியாது'' - என்றார்.

தொடர்ந்து பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் மகளிர் பிரிவின் அமைப்பாளர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர, “பெண்கள் நாட்டின் கண்கள். ஒவ்வொரு பெண்களும் தனித்துவமானவர்கள். பெண்களின் உரிமையை மீட்டெடுக்க அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ், மலையக மக்களின் உரிமைக்காக மும்மொழிகளிலும் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பிய வண்ணமே இருக்கின்றார். அவருடைய கரங்களை பலப்படுத்துவதன் மூலம், எதிர்கால மலையக சமுதாயம் பாரியதொரு முன்னேற்றப் பாதையில் பயணிக்கும்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் ஆகியோர் மலையக மக்களின் மனதை நன்கு புரிந்து கொண்டவர்கள். இவ்விருவருடைய பாரியதொரு முயற்சிகளினால் மலையக மக்களின் பிரச்சினைகளுக்கு வெகுவிரைவில் தீர்வு பெற்றுத் தரப்படும்” - என்றார்.

# போக்குவரத்துக் கட்டண அதிகரிப்பால் மாணவர்கள் - பெற்றோர்கள் பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

இரத்தினபுரி மாவட்டத்தில் பாடசாலை மாணவர்கள் பயணிக்கும் போக்குவரத்துச் சேவை வாகனங்கள் பெற்றோர்களிடம் மனிதாபிமானமின்றி செயல்படுவதாக பெற்றோர் தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகிறது.

தூரப் பாடசாலைகளுக்கு பெற்றோர் தமது பிள்ளைகளை இப்பகுதியில் தனியார் போக்குவரத்து சேவைகளை நடத்தும் பஸ்களில், வேன்களில் தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர்.

எனினும், இப்போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் வாகனங்களின் உரிமையாளர்கள் ஒரு சங்கமாக தம்மை அமைத்துக்கொண்டு போக்குவரத்துக் கட்டணங்களை மனிதாபிமானமின்றி அறவிட்டு வருவதாகவும் இதனால் இம்மாணவர்களின் பெற்றோர் நிர்க்கதியடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகினறது.

மாபியாக்கள் போன்று செயல்படும் இவர்கள் நினைக்கின்றபோதெல்லாம் ஒரு சங்கமாக கூட்டுச் சேர்ந்து கட்டணங்களை அதிகரிப்பதாகவும் பாடசாலை தவணை விடுமுறைக் காலங்களில் மாணவர்கள் போக்குவரத்து செய்யாத காலங்களுக்கும் கட்டணங்களை அறவிடுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.இந்நிலைமையினால் கட்டணங்களை செலுத்திக்கொள்ள முடியாது பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கும் பெற்றோர்கள் பலர் கஷ்டங்களுக்கு உள்ளாவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த உக்குவள மாணவர்களுக்கு பாராட்டு விழா

(உக்குவள நிருபர்)

உக்குவள குரீவெல ஹமீதியா தேசிய பாடசாலையின் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் (2021) சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டும் முக்கிய நிகழ்வொன்று இன்று புதன்கிழமை காலை 9.00 மணிக்கு இப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இப்பாடசாலை அதிபர் எம்.பி.எம்.அஸ்லம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராதெனிய பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.எஸ்.எம்.பரீன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார்.

மேலும், வலயக்கல்வி அதிகாரி திருமதி ரமீசா அதிதியாகவும் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளும் இந்நிகழ்வினை இப்பாடசாலை அதிபர் தலைமையிலான அபிவிருத்திக்குழு மற்றும் மாணவர் குழுவும் இணைந்து நடத்தவுள்ளது.





பாத்ததும்பறை மத்தியஸ்த சபையில் சேவையாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கான பிரியாவிடை வைபவம் அண்மையில் வத்துகாமம், யட்டிராவன மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றபோது, முன்னாள் தலைவருக்கு புதிய தலைவர் நினைவுச்சின்னம் வழங்குவதையும் புதிய மத்தியஸ்த சபை அங்கத்தவர்களையும் காணலாம் (படங்கள் : கண்டி நிருபர்)

# சிறுபான்மை இன சொற்பிரயோகத்திற்கு மாற்றீடு தேவை; அது வன்முறை கலாசாரம் குறைவதற்கு வழிவகுக்கும்

## தேசிய சமாதானப் பேரவை தெரிவிப்பு



(கண்டி நிருபர்)

சிறுபான்மை இனம் என்ற சொற்பிரயோகம் மாற்றீடு செய்யப்பட வேண்டும். அதற்காக மகாநாயக்க தேரர்களது ஆசீர்வாதம் பெறப் பட்டால் பெரும்பான்மை சமூகத்தில் உளவியல் ரீதியில் மாற்றம் ஏற்பட்டு சிறுபான்மையினர் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைக் கலாசாரம் குறைவதற்கு வழிவகுக்கும் - என தேசிய சமாதானப் பேரவையின் செயற்றிட்ட அதிகாரி சம்சுடீன் நஜார் தெரிவித்தார்.

கண்டி டெவோன் ஹோட்டலில் நேற்றுமுன் தினம் (28) இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வன்முறை என்பது ஒருவரையொருவர் தாக்குவது எனக் கருதக்கூடாது. பேச்சு, செய்கை நடத்தை, குறியீடு போன்ற பல காரணிகளால் ஏற்படுத்தப்படும் ஒருவகை நடத்தை மாற்றம் இறுதியில் தாக்குதலில் முடிவடையலாம்.

அதுவே வன்மறையாகும். எனவே, வன் முறைக்குத் தூபமிடும் செய்கைகளைக் குறைக்க வேண்டும். அப்படியான ஒன்றுதான் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற சொற்பிரயோகமும் உள்ளது.

தமிழ் மொழியில் பொதுவாக சிங்கள மொழியை சகோதர மொழி என்று குறிப்பிடுவோம். ஆனால், சிங்கள மொழிப் பிரயோகத்தில் அப்படியாகக் காணமுடியவில்லை.

எனவே, பெரும்பான்மையினர் சிறுபான்மையினர் என்ற சொல்லுக்குப் பதில் சகோதர இனம் அல்லது சகோதர மொழி எனப் பயன்படுத்துவதன் ஊடாக வெறுப்புப் பேச்சு மற்றும் வெறுப்புப் பிரசாரம் போன்றவற்றைக் குறைக்க முடியும் என தான் கருதுவதாகவும் தெரிவித்தார்.

இதனை மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களுக்கூடாக ஆரம்பத்தில் நடைமுறைப் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டால் அது பாரிய வெற்றியாகும் என்றும் தெரிவித்தார்.

# நுவரெலியா - வசந்தகால கொண்டாட்டங்கள் கடும் கட்டுப்பாடுகளுடன் ஏப்ரலில் ஆரம்பம்

## சில விளையாட்டுகளும் நிறுத்தம்

(செ.திவாகரன்)

நுவரெலியா மாநகர சபையின் ஏற்பாட்டில் ஒவ்வொரு வருடமும் நடத்தப்படும் ஏப்ரல் மாத வசந்தகால கொண்டாட்டங்கள் இம் முறையும் ஏப்ரல் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதிவரை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக நுவரெலியா மாநகர சபை முதல்வர் சந்தனலால் கருணாரட்ன தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நுவரெலியா வசந்தகால கொண்டாட்டத்தை சுகாதார வழிகாட்டல்களுக்குகமைய நடத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சிடம் இருந்தும் ஆலோசனைகள் வழங்கப்படுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதற்கமைய நுவரெலியா விலுள்ள சகல உணவகங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பவற்றுக்கு இது தொடர்பில் தெளிவுபடுத்தப்படும்.



வழக்கம்போல் பாடசாலை மாணவர்களின் பேண்ட் வாத்திய நிகழ்வுகளுடன் ஆரம்பமாகும். நிகழ்வில் தொடர்ந்து வரும் நாட்களில் மலர் கண்காட்சி, படகோட்டம், குதிரைப்பந்தயம், பூப்பந்து, டேபிள் டெனிஸ், குழிப்பந்தாட்டம், கிரகறிவாவியில் நீர் விளையாட்டு, தடை தாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் மட்டுப் படுத்தப்பட்டகளியாட்ட விழாக்களே நடை பெறவுள்ளன. நாட்டில் காணப்படும் பொருளாதார நெருக்கடி, கொரோனா வைரஸ் காரணமாக சில விளையாட்டு நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

வசந்தகால நிகழ்வை முன்னிட்டு பாதுகாப்பு நடவடிக்கை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், நுவரெலியா போக்குவரத்து பொலிஸ் பிரிவினரால் விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் காரணமாக உல்லாச பிரயாணிகள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வர வேண்டும் எனவும் மேலும், பொது சுகாதார அதிகாரிகளினால் பிரயாணிகள் கண்காணிக்கப்படுவதோடு, சுகாதார நடைமுறைகளை புறக்கணித்து செயற்பட்டால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவித்தார் .

வருகை தரும் சுற்றுலா பிரயாணிகளுக்கான வாகனத் தரிப்பிடம் உட்பட அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் , சுற்றுலா பிரயாணிகளாக வருபவர்கள் நுவரெலியாவின் இயற்கையையும் அதன் சூழலையும் பாதுகாக்கும் வண்ணம் நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறார்.

இதேவேளை, மோட்டார்,கார் ஓட்டப்போட்டிகள் நடத்துவதற்கு தீர்மானம் இன்னும் எடுக்கவில்லை என நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் பீ.கேதீஸ் தெரிவித்தார்

நாடளாவிய ரீதியில் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி வரும் காரணமாகவும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் முன் காணப்படும் போக்குவரத்து நெரிசல் காரணமாகவும் மோட்டார் ,கார் ஓட்டப்போட்டிகள் நடத்துவது குறித்து நாங்கள் கலந்தாலோசித்து வருகிறோம் - என்றார்

நுவரெலியா விக்டோரியா பூங்காவில் எதிர்வரும் 17,18ஆம் திகதிகளில் மலர் கண்காட்சி போட்டி நடைபெறும், பொது நூலகத்தில் ஓவியக் கண்காட்சியும் நடைபெறவுள்ளது. ஏப்ரல் வசந்தக்கால தற்காலிக கடைகள் கிறகரி வாவி கரையில் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த வருடங்களைவிட இவ்வருடம் பெருந்தொகையான சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள் என வசந்தகால ஏற்பாட்டு குழுவினர் தெரிவிக்கின்றனர்

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# கட்சி பேதமின்றி நாட்டை கட்டியெழுப்புவோம்; நுவரெலியா சர்வமத மாநாட்டில் இணக்கம்



(செ.திவாகரன்)

கட்சி அரசியலிலிருந்து விலகி நாட்டை சரியான பாதையில் கொண்டுசெல்வதற்காக நுவரெலியா பிரதேசத்திலுள்ள அனைத்து மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து வருகின்றனர்.

நுவரெலியா மாவட்ட செயலகம் மற்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகம் ஆகியவற்றின் வழிகாட்டலில் மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் நுவரெலியா கிளையின் யோசனை மற்றும் முன்மொழிவின்பேரில் நுவரெலியா சர்வமத வட்டம் ஏற்பாடுசெய்த “சன்ஹித அருண” நுவரெலியா இயக்குனரகத்தினால் முற்றிலும் அரசியலிலிருந்து விடுபட்ட நாட்டை கட்டியெழுப்ப, ‘நாட்டை கட்டியெழுப்புவோம்’ என்ற தலைப்பிலான ஒரு நாள் செயலமர்வு இடம்பெற்றது.

இந்த செயலமர்வு நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் (28) நுவரெலியா முதல்வர் சந்தன லால் கருணாரத்ன தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொள்ளுமாறு நுவரெலியா பிரதேச செயலகப் பிரிவிYள்ள அனைத்து மத வழிபாட்டுத்தலங்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டு அனைத்து மதத்தினரும் கலந்துகொண்டு பௌத்த சமயத்திற்கு உட்பட்டு அனைத்து இனங்களுடனும் நல்லிணக்கத்துடன் செயற்பட வேண்டியதன் அவசியத்தை முன்வைத்து உடுவெல தம்மிந்த தேரர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். அருட்தந்தை சுதத் ரோஹன தலைமையுரை ஆற்றினார்.

நிகழ்ச்சியின் முடிவில் அனைத்து மதத் தலைவர்களும் இணக்கப்பாட்டுக்கு வந்து, கட்சி பேதமின்றி அரசியலிலிருந்து ஒதுங்கி, அனைத்து மதத்தினரையும் ஒன்றிணைத்து, தேசம் என்ற வகையில் மக்கள் எதிர்கொள்ளவேண்டிய சூழ்நிலையிலிருந்து விடுபட வேண்டும் என்று அறிவுறுத்தினர். மற்றும் மக்களை சரியான அர்த்தங்களுக்கு வழிநடத்துவது இதன் நோக்கம் என்றும் குறிப்பிட்டனர்.

# சாமிமலையில் கோவில் உடைப்பு; தங்கச்சங்கிலி, உண்டியல் கொள்ளை!





(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாமிமலை, பாக்றோ தோட்டத்திலுள்ள அம்மன் கோவில் உடைக்கப்பட்டு, தங்கச்சங்கிலி மற்றும் உண்டியல் என்பன களவாடப்பட்டுள்ளன.

ஆலயத்தின் பூசகர் வழமைபோல் நேற்று முன்தினம் (28) ஆலயத்திற்கு சென்றவேளை, ஆலயத்தின் நுழைவாயில் கதவில் பொருத்தப்பட்டிருந்த பூட்டு உடைக்கபட்டிருந்ததை கண்டு ஆலய நிர்வாக சபைக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

அங்கு வந்த தோட்ட மக்கள், ஆலய நிர்வாக சபையினர் ஆகியோர் ஆலயத்திற்குள் சென்று பார்த்தபோது அம்மன் கழுத்தில் அணியப்பட்டிருந்த தங்க மாலை மட்டும் ஆலய உண்டியல் என்பன களவாடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இது தொடர்பில் மஸ்கெலியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றதாக ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் கம்பளை சாகிராக் கல்லூரி மாணவனும்**



**கெலிஓயாவைச் சேர்ந்த றிஸ்வான் முஹம்மத் மற்றும் பாத்திமா றிஸ்வானா தம்பதியினரின் புதல்வனுமான ஆர்.எம்.றய்யான் 153 புள்ளிகளை பெற்று சித்தியடைந்துள்ளார்.**

**(கண்டி நிருபர்)**

# வவுனியா இ.போ.ச. சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம்







(வவுனியா நிருபர்)

இலங்கை போக்குவரத்து சபையின் வவுனியா சாலை அலுவலகர்கள், சாரதிகள், நடத்துனர்கள் உள்ளிட்டவர்கள் சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று (29) அதிகாலை 5.00 மணிமுதல் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அடிப்படை சம்பளத்தில் 10,000 ரூபா அதிகரிப்பு, வாழ்க்கைப்படியினை 7,500 ரூபாவாக உயர்த்துதல், இடைக்கால கொடுப்பனவான 5,000 ரூபா நிரந்தரமாக்குதல், அதிகாரிகளுக்கான அடிப்படைச் சம்பளத்தினை அதிகரிக்க வேண்டும், வருடாந்த வேதன உயர்வினை நடைமுறைப்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இவர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பணிப்புறக்கணிப்பின் காரணமாக வவுனியா மத்திய பஸ் நிலையத்தில் தனியார் பஸ்கள் மாத்திரமே சேவையில் ஈடுபட்டிருந்ததுடன், முன்னறிவித்தல் இன்றிய பணிப்புறக்கணிப்பு காரணமாக பஸ் இன்றி நீண்டநேரம் மக்கள் காத்திருந்தமையையும் காணக்கூடியதாகவிருந்தது.

தொழிற்சங்க அதிகாரி ஒருவர் சம்பள உயர்வு தொடர்பில் ஊழியர்களிடம் கலந்துரையாடுவதற்காக நேற்று முன்தினம் இ.போ.ச. வவுனியா சாலைக்கு சென்றவேளை, சாலை முகாமையாளரினால் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் குறித்த தொழிற்சங்க அதிகாரி வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த ஊழியர்கள் தெரிவித்தனர்.

தொழிற்சங்க அதிகாரி ஒருவர் வெளியேற்றப்பட்டமை தொடர்பில் சாலை முகாமையாளர் புஞ்சி பண்டாகே மோகன் பிரசாந்த உலுக்குலமவிடம் வினவியபோது, ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்க முடியாது என அவ்விடத்திலிருந்து சென்றார்.

சம்பள உயர்வுக்கான இப்பணிப்புறக்கணிப்புப் போராட்டத்திற்கு அனைத்து சாலையினதும் ஒத்துழைப்பினையும் தருமாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள வவுனியா சாலை ஊழியர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர்.

# இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் கைது

(யாழ். நிருபர்)

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருந்தபோது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் ஒரு படகை மீட்டதுடன், அதிலிருந்த 4 மீனவர்களையும் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்து வந்து கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மன்னாரில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட போசாக்கு உலருணவுப் பொதியில் தரமற்ற அரிசி

## பாதிக்கப்பட்டவர்கள் முறைப்பாடு

(மன்னார் நகர் நிருபர்)



மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சின் ஊடாக உத்தம பூஜா எனும் வேலைத் திட்டத்தின் கீழ் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 20,000 ரூபா பெறுமதியான போசாக்கு கொடுப்பனவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு தற்போது வழங்கப்பட்ட உலருணவுப் பொதியில் தரமற்ற அரிசி பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் கடந்த கார்த்திகை மாதத்திற்காக 2 ஆயிரம் ரூபா பெறுமதியான போசாக்கு உலருணவுப் பொருட்களை மன்னார் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பெற்றுக்கொண்டுள்ளனர்.

குறித்த 2 ஆயிரம் ரூபா பொதியில் 6 கிலோ அரிசி, 1/2 கிலோ பருப்பு, 1/2 கிலோ கடலை மற்றும் 1 மீன் ரின் ஆகியவை உள்ளடக்கப்படுகின்றது.

எனினும், குறித்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட அரிசி தரமற்றதாக காணப்படுவதோடு, மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுகாதார மற்ற முறையில் அரிசி களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

அரிசி பயன்படுத்த முடியாத அளவில் வண்டுகள் உள்ளதாக இவ்விடயம் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்கள் மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் முறையிட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மன்னார் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரியை வினவியபோது,

மன்னார் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்பட்ட போசாக்கு உலருணவுப் பொதியில் வழங்கப்பட்ட அரிசி தொடர்பாக முறைப்பாடு முன்வைக்கப்பட்டது.

முறைப்பாட்டிற்கமைவாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சென்று களஞ்சியசாலையை பார்வையிட்டனர். இதன்போது மக்களுக்கு விநியோகிக்கக்கூடிய வகையில் அங்கு அரிசி களஞ்சியப்படுத்தாமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்போது குறித்த களஞ்சியசாலையிலிருந்து அரிசி விநியோகம் செய்ய தடை செய்யப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# எரிபொருள் இன்மையால் மீன்பிடி - கருவாடு உற்பத்தி பாதிப்பு






(மன்னார் நகர் நிருபர்)

நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் மாவட்டத்தில் மீன்பிடி மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கருவாடு உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான மண்ணெண்ணெய் உரிய விதத்தில் தேவையான அளவு கிடைக்கப் பெறாமையினால் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அதேநேரம் நீண்ட வரிசையில் நின்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண்ணெண்ணெய் கொள்வனவு செய்யவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

மீன்பிடி இன்மையால் மீன்களின் விலை அதிகரித்துள்ளமையினால் கருவாடு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கருவாடுகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

இதன் காரணமாக மக்கள் தற்போது கருவாடுகளை கூட கொள்வனவு செய்யமுடியாத நிலை நிலவி வருகின்றது.

கடந்த மாதம் 900 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட நெத்தலி கருவாடு தற்போது 1,150 ரூபாவாகவும், கடந்த மாதம் 1,100 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட கட்டா 1,350 ரூபாவாகவும் விலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கேரள கஞ்சாவுடன் நாவற்குழியில் ஒருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

கேரள கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) இரவு நாவற்குழிப் பகுதியில் வைத்து நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இராணுவ புலனாய்வுப் பிரிவு மற்றும் சாவகச்சேரி பொலிஸார் இணைந்து குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். கைதான நபரிடமிருந்து சிறிதளவான கேரளக் கஞ்சா மீட்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முதிரை மரக் குற்றிகள் கூமாங்குளத்தில் மீட்பு ஒருவர் கைது



(வவுனியா நிருபர்)

வவுனியா, பண்டாரிக்குளம் காவலரண் பிரிவுக்குட்பட்ட கூமாங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் (28) மாலை 18 முதிரை மரக்குற்றிகளை பொலிஸார் கைப்பற்றியதுடன் சந்தேகநபர் ஒருவரையும் கைதுசெய்துள்ளனர்.

குறித்த பகுதியில் ஒரு பராமரிப்பற்ற காணியில் முதிரை மரக்குற்றிகள் காணப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் பண்டாரிக்குளம் காவலரண் பொறுப்பதிகாரி திலகரத்ன தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் அதனை மீட்டுள்ளதுடன் கூமாங்குளம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய சந்தேகநபர் ஒருவரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

18 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றின் சந்தைப்பெறுமதி 10 இலட்சம் ரூபாவிற்கு மேல் எனவும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சான்றுபொருட்கள் மற்றும் சந்தேக நபரை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ‘வலியும் வழியுமாக கவிஞர் சோ.பத்மநாதன் கவிதைகள்’ கவிதை நூல் வெளியீடு





(யாழ். நிருபர்)


நெல்லியடி மத்திய கல்லூரியில் ஜீவநதி சஞ்சிகை ஏற்பாட்டில் இடம்பெற்ற புத்தகக் கண்காட்சியின் ஓரங்கமாக கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.பௌநந்தி எழுதிய, ‘வலியும் வழியுமாக கவிஞர் சோ.பத்மநாதன் கவிதைகள்’ என்ற நூல் கடந்த 26ஆம் திகதி சனிக்கிழமை வெளியிட்டு வைக்கப்பட்டது.

ஓய்வுபெற்ற அதிபர் இ.இராகவன் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். யாழ். பல்கலைக்கழக கல்வியியல்துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா வெளியீட்டு உரையை ஆற்றினார். கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் ச. லலீசன் ஆய்வுரை மேற்கொண்டார்.

ஓய்வுபெற்ற அதிபர் நடராசா மற்றும் பிரபல உயிரியல் ஆசிரியர் வி.எஸ்.குணசீலன் ஆகியோர் நூலை வெளியிட்டு வைத்தனர்.

# செட்டிகுளத்தில் பிரதேச செயலாளரின் ஆதரவுடன் தொடரும் காடழிப்பு

## திலீபன் எம்.பி. குற்றச்சாட்டு

(வவுனியா நிருபர்)

வவுனியா, செட்டிகுளம் பகுதியில் பிரதேச செயலாளரின் ஆதரவுடன் தொடர்ந்தும் காடழிப்பு இடம்பெற்று வருவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று முன்தினம் (28) மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பிரமனாலங்குளம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள கூழாங்குளம் பகுதியில் 200 ஏக்கருக்கு மேற்பட்ட காட்டுப் பகுதி வவுனியா நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்களை நடத்துபவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது.

அங்குள்ள பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் துணையுடன் காட்டுப் பகுதிகளில் வேலிகளையிட்டு, பின்னர் காணிகளை படிப்படியாக துப்புரவு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. குறித்த நபர்கள் அங்குள்ள அதிகாரி ஒருவருக்கு மிக நெருக்கமானவர் எனவும் தெரியவருகிறது.

குறிப்பாக யுத்தம் காரணமாக பாதிப்படைந்து மீள்குடியேறியுள்ள கன்னாட்டி, கூழாங்குளம், கணேசபுரம், நீலியாமோட்டை ஆகிய பகுதிகளிலுள்ள பலரும் தமது விவசாயம் மற்றும் வாழ்வாதார தேவைக்காக போதியளவிலான நிலமின்றி அவதிக்குள்ளாகியுள்ள நிலையில், பெரிய பண முதலைகள் வேறு பகுதியில் இருந்து சென்று அப்பகுதியில் அரச அதிகாரிகளின் துணையுடன் காடழித்து நிலங்களை அபகரித்து வருகின்றனர்.

இது தொடர்பில் மக்களால் அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் காடழிப்பு நடவடிக்கைகளும், அங்கு இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் தடுத்துநிறுத்தப்படவில்லை. இது தொடர்பில் எனக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு சென்று நிலமைகளை பார்வையிட்டதுடன், வனவளத் துறையினர் மற்றும் அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி காடழிப்பு நடவடிக்கையை தடுத்து நிறுத்தியுள்ளதுடன், மாவட்ட அரச அதிபரின் கவனத்திற்கும் குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளேன்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் செட்டிகுளம், சின்னசிப்பிக்குளம் பகுதியில் இவ்வாறு 100 ஏக்கர் வரையிலான காடுகள் அழிக்கப்பட்ட நிலையில் தடுத்து நிறுத்தியிருந்தேன். இவ்வாறு பொறுப்புடன் செயற்பட வேண்டிய அரச அதிகாரிகள் தொடர்ச்சியான காடழிப்பு நடவடிக்கைகளுக்கு உடந்தையாக செயற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

# சாவகச்சேரி பிரதேச சபையின் மகளிர் தின நிகழ்வு



(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பிரதேச சபையின் மகளிர் தின நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) காலை பிரதேச சபை மண்டபத்தில் சபையின் சிறுவர் மற்றும் மகளிர் குழுத் தலைவி பா.மல்லிகா தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், கொடிகாமம் சித்த மருத்துவ வைத்தியர் திருமதி றஜிதா கனகசுந்தரம், தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி ஜெயந்தி ஜெயசீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தனர்.

மேலும் நிகழ்வில் பிரதேச சபை செயலாளர், உப தவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

திகதி 28.03.2022
திங்கட்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4720
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 12,426,110.00
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 1 9 3 6 7 0
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 17,406,110.00
Mega POWER மெகா பவர் கோடி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1068
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,785,320.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 244,429,654.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து M
சுப்பர் இலக்கம் 04
வெற்றி இலக்கங்கள் 03 49 56 64
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 750
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,686,640.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 04 22 34 73
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 104,992,172.00
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

# ஜனநாயகம் தோற்று இனவாதம் வென்றுள்ளது! முன்னாள் எம்.பி. சிறிநேசன் குற்றச்சாட்டு

(வீரமுனை நிருபர்)



ஜனநாயகம் தோற்றாலும் இனவாதம் வென்றுள்ளது. ஆட்சியாளர்கள் இனவாதத்தால் வென்றுள்ளனர் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரமடைந்து 74 ஆண்டுகள் கடந்துள்ளன. 16 நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இத் தேர்தல்கள் அனைத்திலும் பேரின அடிப்படைவாதக் கட்சிகள் வெற்றிபெற்று ஆட்சிப்பீடமேறியுள்ளன. அதாவது 74 சதவீத சிங்கள மக்களின் பெரும்பான்மையானோரின் ஆதரவைபெற்ற கட்சிகள் ஆளும் அதிகாரத்தினைப் பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன ஆகிய அடிப்படைவாதக் கட்சிகளே ஆளும் கட்சிகளாக இருந்துவந்துள்ளன.

இடதுசாரிக் கட்சிகள் எதுவும் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. அவை இனவாதக் கட்சிகளினால் ஜீரணிக்கப்பட்டுள்ளன. பேரினவாதப் போக்குடைய பிரதான கட்சிகள் ஆட்சியதிகாரத்தினை தமது இனவாதச் சொத்தாகப் பயன்படுத்தி வந்துள்ளன.

சிறுபான்மைத் தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் ஆட்சியதிகார விடயத்தில் பெரியளவு செல்வாக்கு செலுத்துவதில்லை. இந்நிலையில், இலங்கை ஜனநாயகம் சிங்கள இனநாயகமாக இருந்துவருகின்றது. 26 வீதமான தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் இந்த சிங்கள இனநாயகத்தைத் தீர்மானிப்பதில் அழுத்த சக்தியாக இருப்பதில்லை. அதேவேளை, முஸ்லிம், மலையகத் தமிழ்க் கட்சிகள் சிங்களக் கட்சிகளுடன் இணைந்து அமைச்சர் பிரதியமைச்சர், இராஜாங்க அமைச்சர் பதவிகளுக்காக ஐந்தாண்டுகள் நாடாளுமன்ற அரசியலைப் பயன்படுத்துகின்றன.

பேரின இனநாயக இனத்துவேசம் தேர்தல்களில் வெல்லும் போதெல்லாம் தேசிய ஐக்கியம், சகவாழ்வு, இன ஐக்கியம், பல்லின ஜனநாயகம், தன்னிறைவுப் பொருளாதாரம், அபிவிருத்தி, சட்டவாட்சி, மனித உரிமைகள், சமத்துவம், பல்லின கலாசாரம், ஒற்றையாட்சிமுறை, இனப்பிரச்சினைக்கான தீர்வு, வெளியுறவுக் கொள்கை, தேச வளங்களின் பாதுகாப்பு, விவசாயத்துறை, நாணயக்கொள்கை, தொழில் வாய்ப்புகள், விரயங்களின் கட்டுப்பாடு, வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, புத்திஜீவிகளின் வெளியேற்றம், கடன்சுமைப் பிரச்சினை, மலையகத்தமிழர்களின் வாழ்வியல் நிலை, கைத்தொழிற்றுறை, ஏற்றுமதி வருவாய் போன்ற அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. மொத்தத்தில் 74 ஆண்டுகளில் பல வழிகளிலும் நாடு தோற்றுள்ளது, நாட்டு மக்கள் தோற்றுள்ளார்கள்.


நாட்டுப் பொருளாதாரம் எக்கேடு கெட்டாலும் ஆடசியாளர்கள் பலரது வீட்டுப்பொருளாதாரம் வளர்ந்துள்ளது. மகாசங்க மதகுருமார்களின் ஆசீர்வாதம் மக்களுக்கு இல்லாவிட்டாலும் ஆட்சியாளர்களுக்கு உண்டு. தேசத்தின் வெற்றியை விடவும் தேர்தலின் வெற்றி இந்நாட்டில் முக்கியமானது. தேசத்தை இனவாதம் அழித்தாலும் தேர்தல் வெற்றிக்கு இனவாதம் தேவையாகவுள்ளது. ஆட்சியாளர்கள் இனநாயகத்தை விடப்போவதும் இல்லை, ஜனநாயகம் வெற்றிபெறப் போவதும் இல்லை. இனவாதத்தை உருவாக்குதல், வளர்த்தல், பிரயோகித்தல், மக்களை ஏமாற்றுதல், வெற்றியடைதல் இவைதான் ஆட்சியாளர்களின் அரசியல் சமூக பொருளாதார அத்தியாவசிய தேவையாகும்.

எனவே, இந்த நாட்டில் 74 சதவீத சிங்கள இனநாயகத்திற்குள் அடங்கி வாழ வேண்டியதே 26 சதவீத தமிழ் பேசும் மக்களின் தலைவிதியாகும் என்று எழுதாத சிங்கள சமூகச் சட்டம் 26 சதவீதத்தினர் தலையில் எழுதப்பட்டதாக அதிகார ஆட்சியாளர் வர்க்கம் நினைக்கிறது. அதற்கான ஆமாம் சாமிகளாக தமிழ் பேசும் சில அரசியல்வாதிகளும் இருக்கவே செய்கிறார்கள். ஆமாம் சாமிகளுக்கு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அற்ப சொற்ப சலுகைகளாக்கி பதவிகளாக பணமாக பந்தமாக சொகுசுகளாக அதிகார வர்க்கத்தினர் வழங்கி அவர்களுக்கு சுகபோக இன்பம் அளிக்கிறார்கள். இந்நிலையில் இப்போது சமூக பொருளாதார அரசியல் இராஜதந்திரத் தோல்விகள் பின்னடைவுகள் நாட்டை வாட்டுகின்றன.

ஆனால், சிங்களப் பேரினநாயகம் அடிப்படைவாதத்தால் அரியணை ஏறிக்கொண்டு இருக்கின்றது. இந்த வெற்றிகள் நாட்டையும் மக்களையும் தோல்விக்குள்ளாக்கி வருகின்றன. உரிமை இழந்த மக்கள் உள்நாட்டுப் பொறிமுறையால் எதனையும் சாதிக்கவில்லை. இதனால் சர்வதேசப் பொறிமுறையைத் தமிழ் மக்கள் நம்பவேண்டிய நிலைக்கு பேரினவாதம் நிர்ப்பந்தித்துள்ளது - என்றார்.

# நிந்தவூர் பிரதான வீதியில் எரிபொருள் தாங்கி முச்சக்கரவண்டி மோதி விபத்துச் சம்பவம்

## சிறுமி உட்பட நால்வர் பலத்த காயம்





(திகாமடுல்ல நிருபர், ஏ.எல்.எம்.ஷினாஸ், நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நிந்தவூர் பிரதான வீதியில் எரிபொருள் தாங்கி (பவுசர்) மற்றும் முச்சக்கரவண்டி ஆகியன ஒன்றுடன் ஒன்று மோதி நேற்று முன்தினம் (28) விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 10.20 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

அக்கரைப்பற்றிலிருந்து சம்மாந்துறை நோக்கி சென்றுகொண்டிருந்த முச்சக்கரவண்டியும், கல்முனையிலிருந்து அக்கரைப்பற்று நோக்கி பயணித்துக்கொண்டிருந்த எரிபொருள் தாங்கியொன்றுமே நேருக்கு நேர் மோதி இவ்வாறு விபத்துக்குள்ளாகியள்ளன.

இவ்விபத்தில் முச்சக்கரவண்டி பலத்த சேதங்களுக்குள்ளாகியுள்ளதுடன், முச்சக்கரவண்டியில் பயணித்த சிறுமி உட்பட நால்வர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமலை சோனகவாடி நவாத்துல் உளூம் ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா



(எப்.முபாரக்)

திருகோணமலை சோனகவாடி நவாத்துல் உளூம் ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா அதிபர் வசிலா மஹ்ரூப் தலைமையில் நேற்று முன்தினம் (28) திருகோணமலை நகர சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆரம்பப் பாடசாலை வேலைத்திட்டப் பணிப்பாளர் திருமதி எம்.ஜி.தமரா கீத்தாணி, திருகோணமலை சாஹிரா கல்லூரி தேசிய பாடசாலையின் அதிபர் ஏ.எஸ்.எம்.அலிசப்ரி போன்றோர் கலந்துகொண்டு சிறார்களுக்கு பரிசில் வழங்குவதையும், சிறார்களின் நிகழ்ச்சி மற்றும் சிறுவர்களுடன் நிற்பதையும் காணலாம்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தோப்பூர் பகுதியில் எரிவாயு விநியோகம்!



(மூதூர் நிருபர்)

தோப்பூர் அல்-ஹம்றா மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் (28) மாலை 3.30 மணிமுதல் இரவு 7.00 மணிவரை எரிவாயு விநியோகிக்கப்பட்டது.

அசௌகரியங்களுக்கு மத்தியில் நீண்ட வரிசையில் நின்று பொதுமக்கள் எரிவாயுவை கொள்வனவு செய்தனர்.

இதன்போது, 800 எரிவாயு சிலிண்டர்கள் மாத்திரமே விநியோகிக்கப்பட்டிருந்தன. நீண்டநேரம் காத்திருந்த சுமார் 200இற்கும் மேற்பட்டோர் எரிவாயு இன்றி ஏமாற்றத்துடன் வீடுகளுக்கு திரும்பிச் சென்றதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

# "வானம்" குறும்பட திரையிடலும் உரையாடலும் இன்று

(வீரமுனை நிருபர்)

"கா" கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் இயக்குனர் வி.சபேசனின் 'வானம்' குறும்படம் திரையிடலும் உரையாடலும், கல்லடி ஆனந்தசாலை மண்டபத்தில் இன்று (30) பிற்பகல் 03.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

"கா" கலை இலக்கிய வட்டத் தலைவர் ச.மணிசேகரன் தலைமையிலான இந்நிகழ்வில் மட்டு. பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.சுகுணன், கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் திருமதி பாரதி கென்னடி ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

# அக்கரைப்பற்று மாநகர சபை எல்லைக்குட்பட்ட இறைச்சி கடைகளுக்கு விசேட பரிந்துரைகள்



(அக்கரைப்பற்று நிருபர்)

பிரதேச பொதுமக்களுக்கு அசௌகரியம் இல்லாத வகையில் இறைச்சி விற்பனையில் ஈடுபடுமாறு மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி மாட்டிறைச்சி விற்பனையாளர்களுடனான கலந்துரையாடலில் வலியுறுத்தினார்.

மாநகர முதல்வர் அதாஉல்லா அகமட் ஸகி நேற்று முன்தினம் (28) மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் சந்தித்து பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பயனாக, நேற்று முதல் (29) அக்கரைப்பற்று மாநகர ஆளுகையில் உள்ள மாட்டிறைச்சிக் கடைகளில் தனி இறைச்சி கிலோ ஆயிரத்து 250 ரூபாவுக்கும், முள்ளுடன் இறைச்சி (இறைச்சி-800 கிராம், முள்ளு-200 கிராம்) கிலோ ஆயிரத்து 100 ரூபாவுக்கும் விற்பனை செய்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட மாட்டிறைச்சி கடைகளில் கட்டாயம் டிஜிட்டல் தராசு பாவனையுடன், விலைப்பட்டியலை மக்களின் பார்வைக்கு வைத்திருக்கவேண்டுமென மாநகர முதல்வரால் உத்தரவிடப்பட்டது.

மேலும், புனித ரமழான் மாதத்தில் பொதுமக்களுக்கு எவ்வித இடையூறும் இல்லாத வகையில் சீரான முறையில் இறைச்சி விற்பனை இடம்பெற வேண்டும் என்றும் மாநகர பிதா அதாஉல்லா அகமட் ஸகி கேட்டுக்கொண்டார்.

மேற்படி நிபந்தனைகளை மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் ஏற்றுக்கொண்டனர். இதனடிப்படையில் இறைச்சிக் கடைகளை திறக்க இணக்கம் காணப்பட்டது.

விலைக் குளறுபடிகள் மற்றும் பொதுமக்களுக்கு முறையான இறைச்சி விநியோகமின்மை போன்ற காரணங்களால் அக்கரைப்பற்றில் கடந்த ஒரு வார காலமாக மாட்டிறைச்சிக் கடைகள் மாநகர சபையின் உத்தரவின்பேரில் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த இச்சந்திப்பின்போது மாநகர ஆணையாளர், மாநகர சபை கணக்காளர், மாநகர சிரேஷ்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் மாட்டிறைச்சி விற்பனையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# போடியார் புலம்பல்!



**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ரெலோ விலக வேண்டுமாம் எண்டு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்லித்தாரு எலுவா. அவருட கதய பார்த்தால் செல்வத்தார ரோசம் கெட்ட ஆள் என்றத சரியா புரிஞ்சுவச்சிருக்காரு இந்த தம்பி சரி உங்களுக்கு ரோசம் இருந்தால் மாகாண சபை தேர்தலில போட்டியிட மாட்டோம் எண்டு சொல்லுங்க பார்பம் 13, வேண்டாம் எண்டால் அப்ப ஏன் தம்பி மாகாணசபை தேர்தல் கேட்டு பம்மாத்து காட்டிறயள்!**

# கல்குடா வை.எம்.எம்.ஏ. கிளையினரால் கல்வியலாளர்கள் கௌரவிப்பு



(ஓட்டமாவடி நிருபர்)

கல்குடா மத்தி வை.எம்.எம்.ஏ. கிளையினரால் பிரதேச கல்விமான்களின் சேவையினைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பிறைந்துரைச்சேனையில் நடைபெற்றது.

ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திலுள்ள மாவடிச்சேனை அல்-இக்பால் வித்தியாலயத்தை திறன்பட செய்தமைக்காகவும் வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்தை அதிபராக பொறுப்பெடுத்தமைக்காக அதிபர் சேவை உத்தியோகத்தர் யு.எல்.எம்.ஹரீஸ் கௌரவிக்கப்பட்டதுடன், பிறைந்துரைச்சேனை பிரதேசத்தின் முதலாவது ஆங்கில பொது வைத்தியராக நியமிக்கப்பட்ட மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் எம்.எச்.எம்.இம்ரான்கான் மற்றும் பிரதேசத்தில் நீண்டகாலமாக பல்வேறுபட்ட சமூக சமய தொண்டு நிறுவனங்களில் பணியாற்றியவரும் முன்பள்ளி ஆசிரியையாக நீண்டகாலம் கடமையாற்றியவருமான பெண்ணியலாளர் ஜெரீனா ரபீக் ஆகியோரும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இக்கௌரவிப்பு நிகழ்வின் அதிதிகளாக கோறளைப்பற்று – வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் எம்.பீ.எம்.தையீப், இக்பால் கலை மன்ற நிறுவுனர் ஏ.எல்.லியாப்தீன், வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை உத்தியோகத்தர் திருமதி மர்ழியா ஜெளபர், மெக்ஸ் ஒயில் மாவட்ட விநியோகத்தர் எம்.ஏ.நிஸால்தீன், ஜெயந்தியாய அஹமட் ஹிராஸ் வித்தியாலய அதிபர் ஜெயினுலாப்தீன், வாழைச்சேனை ஆயிஸா மகளிர் வித்தியாலய பிரதி அதிபர் எம்.மொஹிதீன் ஆகியோர் அதிதிகளாக கலந்து சிறப்பித்தனர்.

நிகழ்வில் பிறைந்துரைச்சேனை அஸ்ஹர் முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# விஞ்ஞான வினா விடை தொகுப்பு நூல் வெளியீடு!



(எம்.என்.எம்.அப்ராஸ், அஸ்ஹர் இப்ராஹிம், நூருள் ஹுதா உமர்)

விஞ்ஞான பாடத்தினை கற்கும் மாணவர்களுக்கு இலகு முறையில் கற்றுக்கொள்ளும் வகையில் சாய்ந்தமருது லீடர் அஷ்ரப் வித்தியாலயத்தின் விஞ்ஞான பாட ஆசிரியர் எம்.எம்.எம்.உவைஸ் எழுதிய மாணவர்களுக்கான விஞ்ஞான வினா விடை தொகுப்பு அடங்கிய விஞ்ஞான தேனருவி தரம்-06, விஞ்ஞான தேன் கிண்ணம் தரம்-07, விஞ்ஞான தேனருவி தரம்-09 ஆகிய 03 விஞ்ஞான நூல்கள் வெளியீடு, லீடர் அஷ்ரப் வித்தியாலயத்தின் ஆசிரியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை பிரதி அதிபர் ஏ.எம்.நிசார் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நேற்று முன்தினம் (28 ) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சாய்ந்தமருது கோட்டக் கல்வி அதிகாரி என்.எம்.ஏ.மலிக்கும், கௌரவ அதிதியாக பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன், சாய்ந்தமருது ஜீ.எம்.எம்.எஸ். வித்தியாலய அதிபர் எம்.ஐ.இல்லியாஸ், கல்முனை அஸ்ஸுஹரா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா, அல் -ஜலால் வித்தியாலய பிரதி அதிபர் டி.கே.எம். சிராஜ், லீடர் அஷ்ரப் வித்தியாலய பாடசாலை பிரதி அதிபர் எஸ்.எம். சுஜான் ஆகியோரும், விசேட அதிதியாக சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.சஹ்துல் அமீன் உட்பட பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

நூலாசிரியர் எம்.எம்.எம்.உவைஸ் 20 வருட காலம் கற்பித்தல் அனுபவம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 37 வருட கல்விப் பணியிலிருந்து ஓய்வு பெறுகிறார் அதிபர் பரீட்

## வாழைச்சேனையில் இன்று பிரியாவிடை நிகழ்வு

(எச்.எம்.எம்.பர்ஸான்)



வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய அதிபர் அல்ஹாஜ் எம்.ரீ.எம்.பரீட் தனது 37 வருட கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்றுச் செல்கிறார்.

இவர், வாழைச்சேனையைச் சேர்ந்த முகம்மட் தம்பி, நபீசா தம்பதிகளுக்கு 1962ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி மகனாகப் பிறந்துள்ளார். தனது ஆரம்பக் கல்வியை வாழைச்சேனை அந்நூர் பாடசாலையில் கற்றுள்ளதுடன், உயர்தரக் கல்வியை வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்திலும், ஏறாவூர் அலிகார் வித்தியாலயத்திலும் கற்றுள்ளார்.

1984ஆம் ஆண்டு ஆசிரியர் நியமன போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்த இவருக்கு முதலாவது ஆசிரியர் நியமனம் குருநாகல், குளியாப்பிட்டிய அலபடகம அல்-அமீன் மகா வித்தியாலயத்தில் கிடைத்தது.

அதன்பின்னர் 1987ஆம் ஆண்டு அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் பயிற்சி பெற்று மீண்டும் அலபடகம அல் அமீன் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றியுள்ளார்.

அதைத் தொடர்ந்து 1990ஆம் ஆண்டு தான் ஆரப்பப் பிரிவில் கல்வி கற்ற வாழைச்சேனை அந்நூர் பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுவந்த இவர், அந்தப் பாடசாலையில் 19 வருடங்களாக ஆசிரியாராகவும், அதிபராகவும் தனது சேவையை திறன்பட செய்து வந்துள்ளார்.

பின்னர் 2009.04.01இல் வாழைச்சேனையில் ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயம் எனும் பெயரில் பெண்களுக்கான பாடசாலை ஒன்று உருவாக்கப்பட்டு அவர் அந்த பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டார்.

சுமார் பதின்மூன்று வருடங்களாக ஆயிஷா மகளிர் மகா வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றிவரும் இவர், தனது சேவைக் காலத்தில் பாடசாலை கல்வியில் சாதனைகள் படைக்க அயராது பாடுபட்டுள்ளதுடன், பாடசாலைக்குத் தேவையான ஆளணிப் பற்றாக்குறை மற்றும் பௌதீக வள குறைபாடுகளை நிவர்த்திசெய்து கொடுத்துள்ளார்.

இவர், தனது 37 வருட கல்விப் பணியிலிருந்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 28ஆம் திகதி ஓய்வு பெற்றுச் செல்கின்றார். இவ்வாறு ஓய்வு பெற்றுச்செல்லும் இவரது சேவையைப் பாராட்டி வாழைச்சேனை ஆயிஷா மகளிர் மகா வித்தியாலய ஆசிரியர்கள் இவருக்காக பிரியாவிடை நிகழ்வொன்றை இன்று (30) காலை 8.30 மணிக்கு வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை கேட்போர் கூடத்தில் நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்நிகழ்வின் போது, பரீட் அதிபரின் கல்வி, அரசியல், சமூக சேவை உட்பட அவரின் வாழ்வு தொடர்பாக "எம்.ரீ.எம்.பரீட் எனும் ஆளுமை" என்ற சிறப்பு மலரொன்றும் வெளியிடப்படவுள்ளது.

# கிளிவெட்டி முத்துமாரியம்பாள் ஆலய காணியில் அளவீடு நடவடிக்கை!

## தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் பிரவேசித்ததால் பதற்றம்




(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கிளிவெட்டி முத்துமாரியம்பாள் ஆலயத்திற்கு சொந்தமான காணியை தொல்பொருள் திணைக்களம் அளவீடு செய்ய சென்றதால் நேற்று முன்தினம் (28)அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது.

குறித்த கோவிலுக்கு சொந்தமான 20 பேர்ச்சஸ் காணியை தொல்பொருள் திணைக்களமும் நில அளவைத் திணைக்களமும் இணைந்து அளவீடு செய்ய சென்றதால் மக்கள் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். இதன்போது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளர் கலாநிதி ஸ்ரீஞானேஸ்வரன் அங்கு சென்று மக்களுடன் இணைந்து இந்த அளவீட்டை தடுத்து நிறுத்தினார்.

எமது ஆலயங்களை அபகரிக்காதே, எமது மத உரிமைகளை மதியுங்கள், இனமத ஒற்றுமை சீர்குலைக்காதே, எமது ஆலயம் பூர்வீக வரலாறு கொண்டது, நில ஆக்கிரமிப்பு வேண்டாம், தொல்லியலின் போர்வையில் நில ஆக்கிரமிப்பை நிறுத்து போன்ற வாசகங்களை உள்ளடக்கிய வகையில் பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

கவனயீர்ப்புப் போராட்டத்தின் பின் அவ்விடத்தைவிட்டு தொல்பொருள் திணைக்களத்தினர் சென்றனர்.

# சாய்ந்தமருது நகர சபையை பெற்றுத்தர முடியாது என்பது ஊர்ஜிதம்

## அதாவுல்லாவின் கருத்துகள் நகைப்புக்குரியன என்கிறார் யஹியாகான்

(நூருல் ஹ_தா உமர்)

''சாய்ந்தமருது நகரசபை விடயம் கால ஓட்டத்தில் நடைமுறைக்கு வரும் என்ற தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாவுல்லாவின் கருத்து நகைப்புக்குரியது'' என்று மு.கா. பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்துள்ளார்.

ஏ.எல்.எம்.அதாவுல்லா நேற்று முன்தினம் (28) நடத்திய ஊடக மாநாட்டில் சிறுபிள்ளைத்தனமாக கருத்துகளை கூறியது மட்டுமன்றி சாய்ந்தமருது நகரசபை விடயத்தை ஒரு விளையாட்டாக - அலட்சிய தோரணையில் கருத்துக் கூறியிருப்பது கண்டனத்துக்குமுரியது என்றும் யஹியாகான் சுட்டிக்காட்டியுள்ளார்.



மேலும் அவர் கூறியிருப்பதாவது,

சாய்ந்தமருது நகர சபை கோரிக்கையை வைத்து - நாடாளுமன்றத்துக்குத் தெரிவான தே.கா. தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லாவினால் இனி அவ்வாறானதொரு சபையை பெற்றுத்தர முடியாது என்பது ஊர்ஜிதமாகிவிட்டது.

அவ்வாறு இருக்கும்போது கால ஓட்டத்தில் நடைமுறைக்கு வரும் என்று அதாவுல்லா கூறியிருப்பது வெறும் வெற்றுக் கதை மட்டுமன்றி பொய்ப் பிரசாரமும் கூட. தே.கா. தலைவர் எங்கு, எந்த இடத்திலும் சாய்ந்தமருது நகர சபை விடயமாக பேசத் தேவையில்லை. பேசவேண்டிய இடத்தில் பேசாமல், ஊடகங்களில் மட்டும் பேசி சாய்ந்தமருது மக்களையும் அவர்களின் நகர சபை கோஷத்தையும் கொச்சைப்படுத்துவது இனியும் அதாவுல்லாவுக்கு ஆரோக்கியமானதல்ல.

ஆக, அதாவுல்லா இன்னும் இன்னும் சாய்ந்தமருது மக்களை ஏமாற்றி அரசியல் நடத்த முனையாமல் சாய்ந்தமருது நகர சபை விடயத்திலிருந்து முழுமையாக ஒதுங்கிக்கொள்ள வேண்டும். அல்லது தனது வெற்றிக்கு பங்களிப்புச்செய்த சாய்ந்தமருது மக்களின் 9,000 வாக்குகளுக்காவது அதற்கு பரிகாரமாக தனது மிகுதி இரண்டரை வருட கால எம்.பி. பதவியை சாய்ந்தமருதுக்கு வழங்கி நன்றி செலுத்த வேண்டும். சாய்ந்தமருது மக்கள் அதாவுல்லா மீது நம்பிக்கை இழந்துவிட்டனர் என்பதை அந்த ஊரைச் சேர்ந்தவன் என்பதில் என்னால் உறுதியாகக் கூற முடியும். சாய்ந்தமருது மக்கள் தமது நகரசபை விடயத்தில் அதாவுல்லாவை இனியும் நம்பவும் கூடாது. அவரது பசப்பு வார்த்தைகளுக்கு இனியும் ஏமாறவும் கூடாது. அதேபோல், சாய்ந்தமருது பள்ளிவாசல் நிர்வாகமும் இனியும் பள்ளிவாசல் என்ற போர்வையில் மக்களை ஏமாற்ற முனையாது. பள்ளிவாசல் வேலைகளில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்'' என்றும் யஹியாகான் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# மீராசாஹிபு சலீம் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்

(கல்முனை நிருபர்)



அம்பாறை மாவட்டம், கல்முனை-14 நகரமண்டப வீதியைச் சேர்ந்த மீராசாஹிபு சலீம் கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.எம்.முகம்மட் றியாழ் முன்னிலையில் சமாதான நீதவானாக அண்மையில் (23) சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

தற்போது கல்முனை மாநகரசபையில் வருமான பரிசோதகராக கடமையாற்றும் இவர், கல்முனை அல் -மிஸ்பாஹ் மகா வித்தியாலயம், கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை என்பனவற்றின் பழைய மாணவரும், சிறந்த சமூக சேவையாளருமாவார்.

இவர் மர்ஹூம் என்.மீரா சாஹிபு எம்.இளையபிள்ளை ஆகியோரின் புதல்வருமாவார்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குநோய் பரவல் அதிகரித்து வருகின்றது. கடந்த மார்ச் 12ஆம் திகதி தொடக்கம் மார்ச் 18ஆம் திகதிவரையான காலப்பகுதியில் 20 பேர் டெங்குநோய் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இந்தவாரம் டெங்கு தாக்கத்தினால் பாதிப்புக்குள்ளான மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 நோயாளர்களும், ஏறாவூர், கோரளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தலா இரு நோயாளர்களும், செங்கலடி, காத்தான்குடி, ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா ஒரு நோயாளருமாக மொத்தம் 20 பேர் இனங்காணப்பட்டுள்ளனர்.

இருப்பினும் செங்கலடி, வாழைச்சேனை, பட்டிப்பளை, வவுணதீவு, வாகரை, வெல்லாவெளி, ஆரையம்பதி, கிரான் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் டெங்கு நோயாளர்கள் எவரும் இனங்காணப்படவில்லை.


மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ் வருடத்தில் இதுவரை 165 பேர் டெங்குநோய்த் தாக்கத்திற்குட்பட்டுள்ளதாகவும் இதுவரை எவரும் மரணமடையவில்லை எனவும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஜீ.சுகுணன் மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தகவல் தெரிவித்தார்.

இதேவேளை, பொதுமக்கள் மிகவும் விழிப்புடன் செயல்பட்டு வீடுகளில் தேங்கிக் கிடக்கின்ற குப்பைகள், நீர் தங்கியுள்ள இடங்கள் போன்றவற்றை அகற்றி டெங்கு நுளம்புகள் பரவுவதற்கு இடங்கொடுக்காதவகையில் சூழலை துப்பரவாக வைத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# அல்-மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்று சாதனை



எம்.ஜே.அப்துல் ஹஸீப் (அதிபர்) | எம்.எம்.முஹம்மது அனஸ் (பொறுப்பு உதவி அதிபர்) | திருமதி எஸ்.றிஸானா லுத்பி (உதவி அதிபர்) | பீ.எம்.சைபுத்தீன் (பகுதித் தலைவர்) | எம்.எம்.எம். முபாரிஸ் (ஆசிரியர்) | திருமதி எம்.எஸ்.ஜரீனா (ஆசிரியை) | திருமதி. ஆர்.உவைஸ் (ஆசிரியை) | திருமதி ஏ.நஸீபா (ஆசிரியை) | திருமதி எஸ்.றிஜா பானு (ஆசிரியை)



இஸட். பாத்திமா ஸிக்றா - 175 | எம்.ஆர்.சைமல் லுத்பி அஹமட் - 170 | எம்.எப்.அப்றத் மாஷா - 169 | எம்.எப்.ஆபிஷ் அஹமட் -168 | ஏ.ஸைனப் ஸஹானி -167 | எம்.எவ்.பாத்திமா றையான் - 166 | எம்.ரீ.முகம்மத் ஸஹத் - 166 | ரீ. ஆயிஷா ஹானி - 166 | எம்.என்.இஸ்மித் ஐயூப் - 164



எம்.எவ்.அப்துர் ரஹ்மான் - 164 | எம்.ரீ.பாத்திமா ஸல்மா - 163 | பி.என்.ஜதா பாத்திமா - 163 | ஏ.எச்.பாத்திமா ஹன்னாஹ் - 162 | எம்.ஏ.பாத்திமா லீஸா - 161 | எம்.ஏ.ஆகிப் அலா - 158 | எம்.எப்.அஹ்மத் - 157 | எம்.ஜே.உமர் முப்தி - 156 | எம்.ஆர்.முஹம்மத் ஸெஹ்ஷாட் - 156



எம்.ஏ.ஸபீஹா தஸ்கி - 156 | எம்.ஆர்.அஹமட் ஹரிரி - 155 | ஆர்.முஹம்மட் - 155 | எம்.யு.ஸீனத் ஷெரீன் - 153 | ஏ.எச்.அஸ்மத் ஹிபா - 153 | என்.நாஸிஹ் நுஸைப் - 153 | கே.என்.அய்யாஸ் - 153 | எம்.எம்.தல்ஹா - 152 | எஸ்.ஸஹ்றத் மின்ஹா - 152



எவ்.பாத்திமா அக்ஷா - 152 | ஏ.ஹானி ஷஹ்மா - 152 | எம்.ஏ.பாத்திமா றவ்தா - 151 | சீ.எம்.அகார் முஹம்மத் - 150 | யு.அனிகா பாத்திமா - 150 | எம்.எவ்.ஷஹீன் - 149 | எஸ். மிஷால் அஹமட் - 149 | ஏ.டபிள்யூ. இல்பா - 147

(மருதமுனை நிருபர்)

2021ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் மருதமுனை அல்-மனார் மத்திய கல்லூரி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளதாக அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப் தெரிவித்தார். 132 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றி 35 மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று இந்த சாதனையைப் படைத்துள்ளனர். மாணவி இஸட்.பாத்திமா ஸிக்றா 175 புள்ளிகளுடன் பாடசாலை மட்டத்தில் முதலிடத்தை அடைந்துள்ளார்.

இப்பாடசாலையில் இம்முறை அதிக மாணவர்கள் சித்தியடைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

# பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வது குறித்து தொடர்ந்தும் விழிப்புணர்வூட்டும் நடவடிக்கைகள்





## சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவிப்பு

கொவிட்-19 பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது குறித்து பொதுமக்களை விழிப்புணர்வூட்டும், ஆர்வமூட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற சுகாதார அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் உபுல் கலப்பதி முன்வைத்த யோசனைக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர், தடுப்பூசி பெற்றுக்கொள்வது தொடர்பில் சுகாதார அமைச்சு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது. தடுப்பூசி போடும் பணியில் அரசியல் அதிகாரிகளின் தலையீடு காரணமாக ஆரம்ப காலத்தில் சில சிக்கல்கள் ஏற்பட்டதாகவும், ஆனால், தற்போது சில பிரதேசங்களில் அரசியல் அதிகாரிகளின் ஆதரவினால் தடுப்பூசி மிகவும் வெற்றிகரமாக நடந்துள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், பூஸ்டர் தடுப்பூசியை எடுக்க வேண்டாம் என சிலர் திட்டமிட்ட ரீதியாக முன்னெடுக்கும் பிரசாரங்கள் காரணமாக தடுப்பூசி போட்டுக்கொள்வதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். சகல ஊடக நிறுவனங்கள், அரசாங்கத்துறை மற்றும் அரசியல்துறை இணைந்து செயற்பட்டால் தடுப்பூசித் திட்டத்தை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஒரு நகரசபை பிரிவிற்குள் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் பல காணப்படும்போது சுகாதார வைத்திய அதிகாரியின் பணி மூப்பைத் தீர்மானிப்பது தொடர்பில் பிரச்சினை காணப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன், ஒவ்வொரு நகரசபை பிரிவுக்குள் சுகாதார வைத்திய அதிகாரிகள் பலர் பணியாற்றும்போது பொதுநலன் கருதி தீர்மானங்களை எடுப்பது குறித்த பிரச்சினை காணப்படுவதாகவும் வலியுறுத்தப்பட்டது.

பண்டாரவளை வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக அபிவிருத்திசெய்வது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சின் செயலாளர், தியத்தலாவ மற்றும் பதுளை ஆகிய இரண்டு வைத்தியசாலைகள் இருக்கின்றபோதும் பண்டாரவளை வைத்தியசாலையை ஆதார வைத்தியசாலையாக அபிவிருத்திசெய்வதில் சிக்கல் இருப்பதாகக் குறிப்பிட்டார்.

மாறாக தியத்தலாவை வைத்தியசாலையில் அமைக்கப்படாத பிரிவுகளே பண்டாரவளை வைத்தியசாலையில் அமைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். பண்டாரவளை வைத்தியசாலைக்குச் சென்று இப்பிரச்சினை குறித்து ஆராய்வதாக அமைச்சர் இங்கு கூறினார்.

மாத்தறை பொது வைத்தியசாலையின் சி.டி ஸ்கான் இயந்திரம் பழுதடைந்த நிலையில் காணப்படுவது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது. விரைவில் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

பண்டாரகம ஒசுசலவின் மேல் மாடி பண்டாரகம வைத்தியசாலையினால் பயன்படுத்தப்படுவதால் ஒசுசலவின் ஔடதங்களைக் களஞ்சியப்படுத்துவதில் காணப்படும் பிரச்சினை பற்றியும் கலந்துரையாடப்பட்டது. வைத்தியசாலைக்குப் புதிய கட்டடம் அமைக்கப்பட்ட பின்னர் குறித்த மேல் மாடியை மீண்டும் வழங்க வேண்டும் என உறுப்பினர்கள் அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தனர். இது குறித்து மேல் மாகாண ஆளுநருடன் கலந்துரையாடி தீர்வொன்றைப் பெற்றுக்கொடுப்பதாகக் குறிப்பிட்டார்.

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதியர்களுக்கு பாரிய பற்றாக்குறை நிலவுவதாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. தாதியர் பணியாளர்களுக்கு ஆட்களை சேர்ப்பதில் தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவது மற்றும் புதிய வெற்றிடங்களை உருவாக்குவது தொடர்பிலும் நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, மருந்தாக்கல், விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சுகாதார பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

# இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடன் இ.தொ.கா. பிரதிநிதிகள் சந்தித்துப் பேச்சு

## மலையக பல்கலைக்கழகம், வீட்டுத்திட்டம் பற்றி ஆராய்வு

(தலவாக்கலை நிருபர்)

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்ரமணியம் ஜெய்ஷங்கருக்கும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையிலான இ.தொ.காவின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் இந்திய இல்லத்தில் இடம்பெற்றது.

மலையகத்தில் மேற்கொள்ளப்படும் இந்திய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இதன்போது மீளாய்வு செய்யப்பட்டது. அத்துடன், மலையகத்துக்கான இந்தியாவின் உதவித் திட்டங்கள் பற்றியும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மலையகத்தில் அமைக்கப்படவிருக்கும் பல்கலைக்கழகத்திற்கு இந்திய அரசின் பங்களிப்பின் அவசியத்தையும், இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் வீட்டுத்திட்டம் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோர் இ.தொ.காவின் சார்பில் பங்கேற்றிருந்தனர்.



# முகத்துவாரம் ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆலயத்தில் கண் பரிசோதனை முகாம்

லயன்ஸ் கிளப் ஒவ் கொழும்பு கோல்ட் சிட்டி திட்ட செயற்பாட்டாளர் பொன் பத்மநாதனின் ஏற்பாட்டில் ஸ்ரீ ஐய்யப்பன் உதவும் கரங்கள் அறநெறி பாடசாலையும் இணைந்து 350 மாணவ, மாணவிகளுக்கும் 86 பெற்றோர்களுக்கும் இலவச கண் பரிசோதனை முகாம் கொழும்பு முகத்துவாரம் வெங்கடேஸ்வர மகாவிஷ்ணு கோயில் ஸ்ரீ மீனாட்சி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆலய தர்மகர்த்தா துரைசாமி செட்டியாரும் கழகத்தின் செயலாளர் எஸ்.மனோகரன், பொருளாளர் எஸ்.சதாசிவம் பிராந்திய தலைவர் நினேஸ் அமிர்தய்யா, லயன் ஆர்.சிவகுருநாதன், லயன் சிவகுமார், லயன் உதயவர்தனன், லயன் லோகவர்தனன், லயன் தேவராசன் மற்றும் மன்றத்தின் ஸ்தாபகர் பி.கே.வாசன், செயலாளர் அனுஷா ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.



# கிண்ணியா வைத்தியசாலை சிற்றூழியர்கள் ஆர்ப்பாட்டம்

(கிண்ணியா நிருபர்)

கிண்ணியா தள வைத்தியசாலையில் கடமையாற்றும் சிற்றூழியர்கள் நேற்று முன்தினம் (28) காலை 08 மணியளவில் சம்பள உயர்வு கோரி கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். இக்கவனயீர்ப்புப் போராட்டமானது கிண்ணியா தள வைத்தியசாலை வளாகத்தில் இடம்பெற்றது.



இந்தப் போராட்டத்தில் அங்கு கடமையாற்றும் சுமார் 15 இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டோர் ''ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே'', ''ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்த்து தாருங்கள்'', "எமது சம்பளத்தை கூட்டித் தாருங்கள்" முதலான சுலோகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தங்களுக்கு நாளொன்றுக்கு 650 ரூபா சம்பளம் மாத்திரமே வழங்கப்படுவதாகவும் அது போதாதென்றும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# கிரிந்திஎல ஆற்றில் மாணவனின் சடலம் மீட்பு; சந்தேகத்தின்பேரில் நண்பர்கள் மூவர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பெல்மதுளை கிரிந்தலை ஆற்றில் குளிக்கச் சென்ற மாணவன் ஒருவரின் மரணம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் மேலும் மூன்று மாணவர்கள் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வீட்டிலிருந்து கடந்த சனிக்கிழமை வெளியேறிய மாணவன் அன்று வீடு திரும்பாததால் மாணவனது பெற்றோர் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இம்முறைப்பாட்டையடுத்து விசாரணைகளை முடக்கிவிட்ட பொலிஸார் ஆற்றில் கரையொதுங்கிய நிலையில் மாணவனின் சடலத்தை நேற்றுமுன்தினம் மீட்டுள்ளனர்.

அப்பகுதி பாடசாலையொன்றில் தரம் 10 இல் கல்வி கற்கும் 16 வயதான மாணவனே சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிலஸார் தெரிவித்தனர்.

சம்பவ தினம் இம்மாணவன் மேலும் சிலருடன் ஒன்றாக இந்த ஆற்றில் நீராடியுள்ளதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.




அத்துடன், இவருடன் நீராடிய ஏனைய மூன்று மாணவர்களையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இம்மாணவர்கள் நால்வரும் கடந்த சனிக்கிழமை நீராடச் சென்ற போது இம்மரணம் சம்பவித்துள்ள போதிலும் இவ்விடயம் குறித்த தகவல்களை எவருக்கும் தெரிவிக்காமல் ஏனையோர் வீடு சென்றுள்ளனர்.

இதனால் இத்தகவலை உரியவர்களுக்கு வழங்காத குற்றச்சாட்டின் பேரில் இம்மாணவர்கள் மூவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இச்சம்பவம் தொடர்பில் பெல்மதுளை மற்றும் இரத்தினபுரி பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# யாழில் வாள்வெட்டு இருவர் படுகாயம்

(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த வன்முறை கும்பல் மேற்கொண்ட வாள்வெட்டுத் தாக்குதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானவர்களின் வீட்டினுள் இருந்து 3 வாள்களை மீட்டுள்ள கோப்பாய் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கோப்பாய் பகுதியிலுள்ள வீடொன்றினுள் நேற்று முன்தினம் இரவு புகுந்த கும்பல் ஒன்று வீட்டில் இருந்த 30 வயது மற்றும் 26 வயதான இருவர் இரும்புக் கம்பிகளால் தாக்கி வாளினால் வெட்டி படுகாயம் ஏற்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# மதுரங்குளியில் தென்னை நாற்று உற்பத்தி அங்குரார்ப்பண நிகழ்வு

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் - மதுரங்குளி வேல்சுமனபுர பிரதேசத்தில் தென்னை நாற்று உற்பத்தி அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை (27) வைபவரீதியாக இடம்பெற்றது.

தென்னை பயிர்ச்செய்கை சபையின் மேற்பார்வையில் 2022ஆம் ஆண்டு நாடுபூராகவும் 7.5 மில்லியன் தென்னங்கன்றுகளை உற்பத்திசெய்யும் விசேட வேலைத்திட்டத்தின் கீழ் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

மதுரங்குளி பகுதியில் பிரஜைகள் தென்னை நாற்று உற்பத்தியை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்கள் எதிர்வரும் 7 மாதங்களுக்குள் ஆறாயிரம் தென்னை மரக் கன்றுகளை உற்பத்திசெய்து அதனை பயனாளிகளுக்கு விநியோகிப்பதற்காக தென்னை பயிர்ச்செய்கை சபைக்கு வழங்க வேண்டும்.

தென்னை, கித்துல் மற்றும் பனைச்செய்கைகள் மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி, ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, தெங்கு அபிவிருத்தி அதிகார சபை பதில் தலைவர் மாதவி ஹேரத் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது நீர்பாசனத் திட்டத்திற்கான மானிய கொடுப்பனவும், தென்மை மர சேதனைப் பசளை பாவனைக்கான கொடுப்பனவு என்பனவற்றுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டதுடன், தென்னை மற்றும் மரமுந்திரி கன்றுகளும் இராஜாங்க அமைச்சரினால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

அத்துடன், மதுரங்குளி வேல்சுமனபுர பகுதியிலுள்ள "கப்றுக" சங்கத்திலுள்ள சுயதொழிலாளர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைப்பணிகளையும் பார்வையிட்ட இராஜாங்க அமைச்சர் அருந்திக பெர்னாண்டோ, எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்தும் கேட்டறிந்துகொண்டார்.



# வியட்நாமின் ஹோ சி மின் நகரத்திற்கு இலங்கைக்கான புதிய தூதுவர் நியமனம்





வியட்நாமின் ஹோ சி மின் நகருக்கான இலங்கையின் தூதுவராக ஷெர்லி மார்குரைட் ஹொப்மன் அலுவிஹாரே இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். வியட்நாம் சோஷலிசக் குடியரசின் வெளிநாட்டு அமைச்சின் தூதரக விவகாரங்கள் திணைக்களத்தின் துணைப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து கடந்த 23 ஆம் திகதி ஹோ நோயில் அவர் தனது பதவியைப் பெற்றுக்கொண்டார்.

ஹொப்மன் அலுவிஹாரே கொழும்பு மெதடிஸ்ட் கல்லூரியின் பழைய மாணவராவார். பயணம் மற்றும் சுற்றுலாத்துறையில் குறிப்பிடத்தக்க அனுபவத்தைப் பெற்ற அவர், வோக்கர்ஸ் டுவர்ஸ், டெல்மேஜ் குரூப் போன்றவற்றில் பணிபுரிந்து, சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார்.

அவர் 2008ஆம் ஆண்டுமுதல் ஹோ சி மின் நகரில் வசித்து வருவதுடன், தாய்லாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் கூட்டாளர் அலுவலகங்களுடன் கூடிய உலகளாவிய வலையமைப்பு மற்றும் ஆதார நிறுவனமான வியட்நாம் நெட்குளோ சொல்யுஷன்ஸ் லிமிடெட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளராக அவர் தற்போது பணிபுரிந்து வருகிறார். நெட்குளோ நிறுவனமானது, வியட்நாம் வர்த்தகம் மற்றும் தொழில்துறையின் உறுப்பினராகவும் உள்ளது.

ஹோ சி மின் நகரம் வியட்நாமின் வர்த்தக தலைநகரமாகும். எனவே வர்த்தகம், சுற்றுலா, முதலீடு, மக்களிடையேயான தொடர்புகள் போன்றவற்றை மேம்படுத்துவதற்காக இலங்கைப் பிரதிநிதி ஒருவர் இந்நகரில் இருப்பது இன்றியமையாதது.

இந்த சரியான நேரத்தில் நியமனம் மக்களுக்கு ஊக்கமளிக்கும். இலங்கை மற்றும் ஹோ சி மின் நகரிலுள்ள இலங்கை சமூகத்தால் ஏற்பாடு செய்யப்படும் விளம்பர நடவடிக்கைகளுக்காக புதிய கௌரவத் தூதுவரின் மூலம் அடிப்படைத் தூதரக சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இரண்டாவது செயலாளர் (வர்த்தகம்) பிரசாதி புமாவலகே மற்றும் ஹா நோயில் உள்ள இலங்கைத் தூதரகத்தின் இணைப்பாளர் கிரிஷாந்தி ராமநாயக்க ஆகியோர் இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி விழாவில் கலந்துகொண்டனர்.

# உலக செய்திகள்

## தாக்குதல்களால் உருக்குலையும் மரியுபோல்: 210 குழந்தைகள் உட்பட 5000 பேர் பலி



# உக்ரைனை இரண்டாக்க ரஷ்யா திட்டம்

உக்ரைனின் கடுமையான எதிர் தாக்குதலால் அந்நாட்டை இரண்டாக உடைக்க ரஷ்யா திட்டமிட்டுள்ளது. இதற்காக கிழக்கு உக்ரைனை முழுமையாக கைப்பற்ற ரஷ்ய இராணுவம் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரஷ்யா கடந்த மாதம் 24ஆம் திகதி அந்நாட்டின் மீது போர் தொடுத்தது. இன்று 35ஆவது நாளாகவும் மோதல் தொடர்ந்து வருகிறது.

கெர்சன் நகரை ரஷ்யா கைப்பற்றிய நிலையில், மரியுபோல் உள்ளிட்ட பெரும்பாலான நகரங்களை சர்வ நாசம் செய்துள்ளது. கார்கீவ், லிவிவ் நகரங்களில் தொடர்ந்து போர் நடக்கும் நிலையில், உக்ரைன் இராணுவம் சரணடையாமல் கடுமையான பதில் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. இதன் காரணமாக தலைநகர் கீவ், கார்கீவ் போன்ற முக்கிய நகரங்களை கைப்பற்றும் ரஷ்யாவின் முயற்சி தோல்வியடைந்துள்ளது.

இதை உணர்ந்துகொண்ட ரஷ்யா, வட கொரியா, தென் கொரியாவை போன்று உக்ரைனை இரண்டாக உடைக்க திட்டமிட்டிருப்பதாக உக்ரைன் உளவுத்துறை தளபதி தெரிவித்துள்ளார். அதாவது மேற்கு உக்ரைன், கிழக்கு உக்ரைனை தனித்தனியாக உடைப்பதே ரஷ்யாவின் தற்போதைய திட்டம். கிழக்கு உக்ரைனில் ஏற்கனவே டான்பாஸ் பிராந்தியத்தின் டோனெட்ஸ்க், லுஹான்ஸ்க் ஆகிய நகரங்களை கிளர்ச்சிப்படை மூலம் ரஷ்யா தன் வசப்படுத்தியுள்ளது. எனவே, கிழக்கு உக்ரைனை முழுமையாக கைப்பற்ற அப்பகுதியில் தற்போது ரஷ்யப் படைகள் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. அதேசமயம், கார்கீவ், கீவ் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மீது வான்வழித் தாக்குதலை ரஷ்ய இராணுவம் தொடர்ந்து நடத்த திட்டமிட்டுள்ளது.

### சமாதான பேச்சு ஒத்திவைப்பு

இதற்கிடையே, துருக்கியின் இஸ்தான்புல்லில் ரஷ்யா, உக்ரைன் நாட்டு பிரதிநிதிகள் போர் நிறுத்த பேச்சு நடத்த திட்டமிட்டிருந்தனர். கடைசிநேரத்தில் அந்த பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டது. ஆனாலும், இப்பேச்சுவார்த்தை இந்த வாரத்தில் நிச்சயம் நடக்கும் என உக்ரைன் உறுதிசெய்துள்ளது. பேச்சுவார்த்தையில் ரஷ்ய ஜனாதிபதி புட்டின் - உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி இருவரும் நேரடியாக ஆலோசிப்பது தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளன. ஆனால், புட்டின் - ஸெலென்ஸ்கி பேச்சுக்கு ரஷ்யா இப்போதைக்கு தயாராக இல்லை. முக்கியமான சில விடயங்களுக்கு உக்ரைன் உட்பட்டால் மட்டுமே இது சாத்தியமாகும் என ரஷ்ய வெளியுறவு அமைச்சர் தெரிவித்துள்ளார். இதனால் இப்பேச்சு உக்ரைன் விவகாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.


### ஸெலென்ஸ்கி மீதான கொலை முயற்சி முறியடிப்பு

உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி மீதான கொலை முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது என உக்ரைன் அரசு தகவல் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் சிறப்பு படைப் பிரிவைச் சேர்ந்த 25 பேர் கொண்ட இராணுவக் குழு உக்ரைன் ஜனாதிபதியைக் கொல்ல ரஷ்ய அரசால் அனுப்பப்பட்டிருந்தது. இந்நிலையில், ஸ்லோவேகியா- ஹங்கேரி எல்லையில் வைத்து 25 பேர் கொண்ட இராணுவக் குழுவை கைதுசெய்துள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான செய்தியை கீவ் நாளிதழ் வெளியிட்டுள்ளது. ஜனாதிபதி ஸெலென்ஸ்கியைக் கொல்ல தொடர்ந்து ரஷ்யா முயன்று வருவதாகவும், இதுதொடர்பான பல முயற்சிகளை தங்களது இராணுவம் முறியடித்துள்ளதாகவும் உக்ரைன் தெரிவித்துள்ளது.





### சமாதானப் பேச்சில் ஈடுபட்ட ரஷ்ய செல்வந்தர் மீது விஷத் தாக்குதல்

உக்ரைன் – பெலாரஸ் எல்லையில் அமைதி பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட ரஷ்ய செல்வந்தர் அப்ராமோவிச்சிற்கு விஷம் கொடுக்கப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

செல்ஸீ எவ் சி கால்பந்து அணியின் உரிமையாளரான அப்ரோமோவிக், கண் மற்றும் தோல் எரிச்சலால் பாதிக்கப்பட்டு தற்போது குணமடைந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் - ரஷ்யா இடையே அமைதியை ஏற்படுத்தும் பேச்சுவார்த்தையை அழிக்க நினைக்கும் கடும்போக்கு ரஷ்யர்களால் இந்த விஷ தாக்குதல் திட்டமிடப்பட்டிருக்கலாம் என வால் ஸ்ட்ரீட் ஜெனலின் செய்தியொன்று தெரிவிக்கிறது.

மேலும் இரு உக்ரைன் பிரதிநிதிகள் தாக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த மாத தொடக்கத்தில் அமைதி பேச்சுவார்த்தை தொடர்பாக மொஸ்கோ மற்றும் கீவ்விற்கு இடையே பலமுறை பயணம் செய்தார் அப்ராமோவிக். மேலும் அவர் உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கியை சந்தித்ததாகவும் செய்திகள் வெளியாகின.

### மரியுபோலில் 210 குழந்தைகள் உட்பட 5 ஆயிரம் பேர் பலி

உக்ரைனின் மரியுபோல் நகரில் 210 குழந்தைகள் உட்பட ஏறத்தாழ 5 ஆயிரம் பேர் ரஷ்யப் படைகளின் வான் தாக்குதலுக்கு பலியானதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்யப் படைகளின் தாக்குதலால் தலைநகர் கீவ்வின் அண்டை நகரான மரியுபோல் உருக்குலைந்து காட்சியளிக்கிறது.

சுமார் 70இற்கும் மேற்பட்ட வைத்தியசாலைகள், பாடசாலைகள், குடியிருப்புகள் உள்ளிட்டவை தாக்குதலில் உருக்குலைந்துள்ளன.

## இருநாட்டு தலைவர்கள் பேச்சு சாத்தியமா?



மரியுபோலில் சுமார் 1,60,000 பேர் சிக்கியுள்ளனர். அவர்கள் உணவு, குடிநீர், மின்சாரம் என அடிப்படை வசதிகள் எதுவுமின்றி பரிதவித்து வருகின்றனர். மக்களை வெளியேற்ற 26 பஸ்கள் தயார் நிலையில் இருக்கின்றன.

ஆனால், அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு ரஷ்யப் படைகள் சம்மதிக்கவில்லை எனவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதனிடையே மரியுபோல் நகரத்துக்கு இன்னும் எந்த உதவிகளும் செய்ய முடியவில்லை என்று மனிதாபிமான உதவிகளை வழங்கும் சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

### அழிவின் விளிம்பில் மரியுபோல்

உக்ரைனில் ரஷ்யப் படைகளின் தொடர் தாக்குதல்களால் துறைமுக நகரான மரியுபோல் அழிவின் விளிம்புக்கு சென்றுள்ளது. நகரில் சுமார் 1.60 இலட்சம் பேர் வெளியேறமுடியாமல் சிக்கியுள்ளனர்.

உக்ரைன் மீதான போரின் முதற்கட்ட இலக்கை எட்டிவிட்டதாகவும், இனி உக்ரைனின் கிழக்கு பகுதிகளை பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்போவதாகவும் ரஷ்யா கூறினாலும் இன்னும் அதை செயற்படுத்தவில்லை. மாறாக, உக்ரைன் நகரங்களை சுடுகாடுகளாக மாற்றும் மூர்க்கத்தனமான தாக்குதல்கள் தொடர்ந்து வருகின்றன.

குறிப்பாக, துறைமுக நகரமான மரியுபோல் மீதான தாக்குதல்கள் நாளுக்குநாள் தீவிரமடைந்து வருகின்றன. ரஷ்யப் படைகளின் தொடர் குண்டு வீச்சால் மரியுபோல் நகரிலுள்ள கட்டடங்கள் அனைத்தும் எலும்புக்கூடுகளாக காட்சியளிக்கின்றன.

இந்நிலையில், மரியுபோல் நகரம் அழிவின் விளிம்பில் சிக்கியுள்ளதாகவும், அங்குள்ள அனைவரும் வெளியேற வேண்டும் எனவும், அந்நகர மேயர் வாடிம் போய்சென்கோ தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

### மீட்கப்பட்டது இர்பின் நகரம்

உக்ரைன் மீதான போர் இன்று 35ஆவது நாளை எட்டிய நிலையில் ரஷ்யப் படைகள் பல்வேறு இடங்களில் பின்வாங்குவதாக செய்திகள் வெளியாகின்றன.

இந்நிலையில், தலைநகர் கீவ்வின் அண்டை நகரான இர்பினை ரஷ்யாவிடமிருந்து மீட்டதாக அந்நகர மேயர் ஒலக்சாண்டர் மார்குஷன் தெரிவித்துள்ளார்.

தனது சமூகவலைத்தள பக்கத்தில் ஒலக்சாண்டர் வெளியிட்ட வீடியோவில், ரஷ்யப் படைகளிடமிருந்து இர்பின் நகரம் விடுவிக்கப்பட்டதாகவும், இருப்பினும் ரஷ்யப் படைகள் நடத்தும் கூடுதல் தாக்குதல்களை துணிவுடன் எதிர்கொள்வோம் என்றும் பதிவிட்டுள்ளார்.

இதற்கிடையில் ரஷ்யப் படைகள் மீண்டும் ஒருங்கிணைந்திருப்பதாகவும், ஆனால், உக்ரைனில் அவர்களால் எங்கும் முன்னேற முடியவில்லை எனவும், அந்த நாட்டின் துணை இராணுவ அமைச்சர் ஹன்னா மால்யர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "ரஷ்யப் படைகள் தாங்கள் ஏற்கனவே கைப்பற்றியுள்ள பகுதிகளில் தங்களின் நிலையை வலுப்படுத்த முயற்சித்து வருகின்றன. கீவ்வை கைப்பற்ற முயற்சிக்கின்றன. ஆனால், அவர்கள் எங்குமே முன்னேற முடியவில்லை" - என்றார்.

### எல்லையை கடக்கும் மக்கள்

உக்ரைனில் போர் நின்றுவிடும் என்ற நம்பிக்கையோடு நாட்டிலேயே தங்கியிருந்தவர்களும்கூட, தங்களது நம்பிக்கையை இழந்து, தற்போது அங்கிருந்து வெளியேறி வருகிறார்கள். அந்தவகையில் உக்ரைனிலிருந்து இதுவரை 38,66,224 பேர் வெளியேறி அண்டை நாடுகளில் தஞ்சமடைந்துள்ளதுடன், 65 இலட்சத்துக்கும் அதிகமானோர் உள்நாட்டிலேயே இடம்பெயர்ந்துள்ளனர்.

உக்ரைன் - போலந்து எல்லைப் பகுதியில் தங்களது குறைந்தபட்ச உடைமைகளுடன் எதிர்காலம் பற்றிய கேள்விக்குறியுடன் அவர்கள் எல்லையைக் கடக்கும்போது ஒரேயொரு நம்பிக்கை மட்டும்தான் அவர்களை வழிநடத்துகிறது. அதுதான், நிச்சயம் ஒரு நாள் சொந்த நாட்டுக்கு திரும்புவோம் என்பதே.

போர் தொடங்கியபோது ஆயிரக்கணக்கானோர் தங்களது நாடுகளை விட்டு வெளியேறிய நிலையில், பலரும் நிலைமை விரைவில் சரியாகும் என்ற நம்பிக்கையோடு அங்கேயே தங்கியிருந்தனர். ஆனால், நிலைமை சீரடையாமல் உணவுக்குக்கூட தட்டுப்பாடு ஏற்பட்டதால், போலந்து நோக்கி தங்களது பணத்தைத் தொடங்குகிறார்கள்.

நடைப்பயணமாகவோ அல்லது கார்கள் மூலமாகவோ பலரும் போலந்தை அடைகிறார்கள். போலந்து எல்லைப் பகுதியை நோக்கி வருபவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகள், வயதானவர்களாகத்தான் இருக்கிறார்கள். உக்ரைனிலிருந்து ஆண்கள் வெளியேற தடை விதித்திருப்பதால், பெண்களும் குழந்தைகளும் மட்டுமே எல்லையை தாண்டுகிறார்கள். போலந்தின் மெடிகா மற்றும் ஷேய்னி போன்ற கிராமங்களில் தஞ்சமடைகிறார்கள். அந்தவகையில் போலந்தில் இதுவரை 22,93,833 பேர் தஞ்சம் புகுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ரஷ்ய பீரங்கி அணிவகுப்பை தகர்த்த உக்ரைன் ட்ரோன்கள்

உக்ரைன் தலைநகர் கீவ்வை கைப்பற்ற அந்நகரை நோக்கி சுமார் 60 கிலோமீற்றர் தூரத்திற்கு ரஷ்ய பீரங்கிகள் அணிவகுத்து நிறுத்தப்பட்டன. இந்நிலையில், உக்ரைன் இராணுவத்தின் சிறப்பு பயிற்சிபெற்ற 30 வீரர்களைக் கொண்ட ட்ரோன் படை, ரஷ்ய பீரங்கி அணிவகுப்பை தாக்கி தகர்த்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இரவில் ஏவப்பட்ட ட்ரோன்கள் மூலம் ரஷ்ய பீரங்கிகள் பல அழிக்கப்பட்டுள்ளதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

### ஒஸ்கார் விருது விழாவில் உக்ரைனுக்கு ஆதரவு

இதேவேளை, அமெரிக்காவின் கலிபோர்னியாவிலுள்ள லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடைபெற்ற ஒஸ்கார் - 2022 விருது வழங்கும் விழாவில் பாரம்பரியமிக்க சிவப்பு கம்பள வரவேற்பில் பங்கேற்ற கலைஞர்களில் பெரும்பாலானோர் உக்ரைன் நாட்டு கொடியை தங்களது அங்கியில் இடம்பெறச் செய்திருந்தனர். சிலர் உக்ரைனிலிருந்து அண்டைநாடுகளுக்கு அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள மக்களுக்கு ஆதரவாக நீல நிறத்திலான ரிப்பனை அணிந்து வந்திருந்தனர்.

மேலும், விழா அரங்கின் பிரம்மாண்ட திரையில் உக்ரைனுக்கு ஆதரவான செய்தி இடம்பெற்றது. அதில், ''உக்ரைனை உங்களால் முடிந்த விதத்தில் ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். உக்ரைனிலுள்ள மில்லியன் கணக்கான குடும்பங்களுக்கு உணவு, மருத்துவம், சுத்தமான நீர் மற்றும் அவசர சேவைகள் தேவை. நாம் கூட்டாக, உலகளாவிய சமூகமாக முடிந்த உதவிகளை செய்வோம்'' என கூறப்பட்டது.

### ஊடகவியலாளர்கள் 12 பேர் பலி

உக்ரைன் போரில் இதுவரை 12 ஊடகவியலாளர்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு அரசு தலைமை வழக்கறிஞர் (Prosecutor General) தெரிவித்துள்ளார். மேலும் 10 பேர் காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதவிர, 56 ஊடகத்தினருக்கு எதிராக ரஷ்யா குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் இதில் 15 பேர் வேறு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த 15 பேரில் பிரித்தானியாவைச் சேர்ந்த 4 பேர், செக் குடியரசைச் சேர்ந்த 2 பேர், டென்மார்க்கைச் சேர்ந்த 2 பேர், அமெரிக்கர்கள் இருவர் ஐக்கிய அரபு இராச்சியத்தைச் சேர்ந்த இருவர், சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஒருவரும் அடங்குவர்.

மேலும், ஊடக அலுவலகத் தாக்குதல், தொலைக்காட்சிக் கோபுர தாக்குதல் என பல வழக்குகள் பதியப்பட்டுள்ளன. உக்ரைன் போர் தொடங்கியதிலிருந்து இதுவரை ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகங்களுக்கு எதிராக 148 சட்டவிரோத நடவடிக்கைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

### இந்திய மாணவர்களுக்கு ரஷ்ய பல்கலை அழைப்பு

உக்ரைனில் மருத்துவம் படித்து போரினால் தாய்நாடு திரும்பியுள்ள இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாட்டு மாணவர்கள் தங்கள் நாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வியைத் தொடரலாம் என ரஷ்யா அழைப்புவிடுத்துள்ளது. மாணவர்கள் நடப்பாண்டிற்கான கட்டணம் செலுத்த தேவையில்லை என்றும் தனி நுழைவுத் தேர்வுகள் தேவையில்லை என்றும் ரஷ்ய பல்கலைக்கழகங்கள் உறுதியளித்துள்ளன. உக்ரைனிலிருந்து இந்தியாவுக்கு சுமார் 16 ஆயிரம் மாணவர்கள் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.






# உலகக்கிண்ணத் தொடரின் முதல் அரையிறுதி ஆட்டம் இன்று

12ஆவது ஐ.சி.சி. மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் முதல் அரையிறுதிப் போட்டி இன்று நடைபெறுகிறது. இன்று நடைபெறுகின்ற போட்டியில் அவுஸ்திரேலிய மகளிர் ஆடும் அணியும், மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.

12ஆவது ஐ.சி.சி. மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் கடந்த வருடம் நடைபெறவிருந்த நிலையில், கொவிட்-19 தாக்கம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு கடந்த 4ஆம் திகதி நியூசிலாந்தில் ஆரம்பமானது. 8 அணிகள் பங்கேற்ற குறித்த தொடரின் லீக் சுற்று முடிவில் புள்ளிப்பட்டியலில் முதல் 4 இடங்களை பிடித்த அணிகள் அரையிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றன. அதனடிப்படையில் முதல் இடத்தைப் பிடித்த அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகள் தகுதி பெற்றன.

அந்தவகையில் முதலிடத்தைப் பிடித்த அவுஸ்திரேலிய அணிக்கும், நான்காம் இடத்தைப் பிடித்த மேற்கிந்திய தீவுகள் அணிக்கும் இடையில் முதலாவது அரையிறுதிப் போட்டி இன்று இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு வெலிங்டனில் ஆரம்பமாகிறது. நாளை நடைபெறுகின்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க மகளிர் அணியும், இங்கிலாந்து மகளிர் அணியும் பலப்பரீட்சை நடத்துகின்றன.



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் க்ளேன் மெக்ஸ்வெல் மற்றும் அவரது மனைவி வினி ராமன் இருவருக்கும் தமிழ்நாட்டு பாரம்பரிய முறையில் திருமணச் சடங்குகள் நடைபெற்றன. இதற்கு முன்னதாக இருவருக்கும் இடையிலான திருமணம் குறித்து தமிழ் மொழியில் வெளியிடப்பட்ட திருமண அழைப்பிதழ் இணையத்தில் வைரலான நிலையில், தற்போது இருவருக்கு நடத்தப்பட்ட தமிழ் பாரம்பரிய திருமணச் சடங்கு குறித்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது.

# பந்துவீச்சு சொதப்பலால் வெற்றியை கோட்டைவிட்ட லக்னோ

## சமீரவுக்கு ஓவர் இருந்தும் பயன்படுத்தாமல் விட்ட ராகுல்

கன்னி ஐ.பி.எல். போட்டியில் களமிறங்கிய ஹார்டிக் பாண்டியா தலைமையிலான குஜராத் டைட்டன்ஸ் அணி தங்களது முதல் வெற்றியை பதிவுசெய்தது.

2022ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடரில் புதிதாக களமிறங்கிய இரு அணிகளான குஜராத் டைட்டன்ஸ் மற்றும் லக்னோ சுப்பர் ஜயண்ட்ஸ் அணிகளுக்கிடையிலான லீக் போட்டி நேற்று முன்தினம் இரவு மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது.



முதலில் பேட் செய்த லக்னோ அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட்டுக்கு 158 ஓட்டங்கள் எடுத்தது. தீபக் ஹூடா 55 ஓட்டங்களையும், ஆயுஷ் பதோனி 54 ஓட்டங்களையும் எடுத்தனர். குஜராத் சார்பில் மொஹமட் ஷமி 3 விக்கெட்டுகளையும், வருண் ஆரோன் 2 விக்கெட்டுகளையும், ரஷிட் கான் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

159 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் அணி களமிறங்கியது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் சமீரவின் பந்தில் டக் அவுட்டானார். அடுத்து இறங்கிய விஜய் சங்கர் 4 ஓட்டங்களில் சமீரவின் பந்துவீச்சில் அவுட்டானார். ஹார்டிக் பாண்டியா 33 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரர் மெத்யு வேட் 30 ஓட்டங்களில் வெளியேறினார்.

குஜராத் அணி ஒரு கட்டத்தில் 78 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தத்தளித்தது. அடுத்து இறங்கிய டேவிட் மில்லர், ராகுல் தெவாடியா அதிரடியாக ஆடினர். மில்லர் 30 ஓட்டங்களில் வெளியேறினார். இறுதியில், குஜராத் அணி 5 விக்கெட் இழப்புக்கு வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களை எடுத்து ஐ.பி.எல். தொடரில் கன்னி வெற்றியைப் பதிவுசெய்தது.

லக்னோ அணியின் பந்துவீச்சில் இலங்கை வீரர் துஸ்மந்த சமீர 3 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார். சமீரவுக்கு இன்னும் ஒரு ஓவர் மீதமிருந்தும் அணித்தலைவர் கே.எல் ராகுல் சரியான முறையில் ஒழுங்கு படுத்தாமையே லக்னோ அணியின் தோல்விக்கு காரணமாக அமைந்தது.

GT vs LSG
போட்டியை காண



# மார்ஷுக்கு பதில் வீரராக களமிறங்குவாரா சானக்க?

பாகிஸ்தான் அணிக்கெதிரான தொடரில் இடம்பெற்றுள்ள மிட்செல் மார்ஷ் பீல்டிங் பயிற்சியில் ஈடுபட்டபோது அவருக்கு இடுப்புப் பகுதியில் உபாதை ஏற்பட்டது. இதனால் வலியால் துடித்த அவருக்கு உபாதையின் தன்மையை அறிந்து கொள்ள 'ஸ்கேன்' பரிசோதனை செய்யப்பட்டது. அதன் முடிவு இன்னும் வரவில்லை. இருப்பினும், மிட்செல் மார்ஷ் பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடர் மற்றும் ஒரே ஒரு 20 ஓவர் போட்டியில் விளையாடுவது சந்தேகம்தான் என்று தெரிகிறது.

இது ஒரு பக்கம் இருக்கும் நிலையில், 30 வயதான மிட்செல் மார்ஷ் ஐ.பி.எல். தொடரில் டெல்லி கெப்பிட்டல்ஸ் அணியில் ரூ. 6.5 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டார். ஏப்ரல் 6ஆம் திகதி டெல்லி அணியினருடன் இணைய திட்டமிட்டு இருக்கும் மிட்செல் மார்ஷ் இந்த சீசனுக்கான ஐ.பி.எல். போட்டியில் விளையாட முடியுமா? என்பதிலும் கேள்விக்குறி எழுந்துள்ளது.

அவரது காயத்தின் தன்மையை பொறுத்து ஐ.பி.எல். போட்டியில் விளையாடுவது தீர்மானிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

மிட்செல் மார்ஷ் இவ்வாறு ஐ.பி.எல். தொடரில் விளையாட முடியாத நிலை ஏற்படும் பட்சத்தில் அவருக்கு மாற்று வீரராக இலங்கை அணியின் தலைவர் தசுன் சானக்க இடம்பெறலாம் என்ற ஊகங்கள் எழுந்துள்ளன.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com




# மூன்று பதக்கங்களை வென்ற இலங்கைக்கு இரண்டாமிடம்!

இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய நகர்வல ஓட்ட சம்பியன்ஷிப் தொடரில் இலங்கை அணி இரு வெள்ளி மற்றும் ஒரு வெண்கலப் பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டது. அத்துடன், இருபாலாருக்குமான சிரேஷ்ட பிரிவுகளில் இலங்கை அணி ஒட்டுமொத்த ரீதியில் இரண்டாவது இடத்தைப் பெற்றது.

இலங்கை, இந்தியா உள்ளிட்ட ஐந்து தெற்காசிய நாடுகள் பங்குகொண்ட அங்குரார்ப்பண தெற்காசிய நகர்வல சம்பியன்ஷிப் தொடர் அண்மையில் இந்தியாவின் நாகலாந்து மாநிலத்திலுள்ள கொஹீமாவில் நடைபெற்றது.

இந்தப் போட்டித் தொடருக்காக இலங்கையிலிருந்து 12 வீரர்கள் பங்குபற்றியிருந்ததுடன், ஆண்களுக்கான சிரேஷ்ட பிரிவு நகர்வல ஓட்டத்தில் பங்குகொண்ட இலங்கையின் ஆர்.எம்.எஸ். புஷ்பகுமார வெள்ளிப் பதக்கம் வென்றார்.



ஆண்களுக்கான கனிஷ்ட பிரிவில் போட்டியிட்ட ஜாலிய சங்கீத் மதுஷான் வெள்ளிப் பதக்கத்தை சுவீகரித்தார்.

பெண்களுக்கான சிரேஷ்ட பிரிவு நகர்வல ஓட்டத்தில் பங்குகொண்ட சுஜானி பெரேரா வெண்கலப் பதக்கம் வென்றார். இதன்படி, ஆண்களுக்கான சிரேஷ்ட பிரிவில் இரு வெள்ளிப் பதக்கங்களை வென்றதன் மூலம் அணிகளுக்கான குழு நிலையில் இலங்கை அணி இரண்டாவது இடத்தையும், பெண்களுக்கான சிரேஷ்ட பிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டது.

# 36 ஆண்டுகளின் பின் உலகக்கிண்ணத் தொடருக்கு தகுதிபெற்ற கனடா

டொராண்டோவில் ஜமைக்காவுக்கு எதிரான போட்டியில் 4-0 என்ற கோல் கணக்கில் வென்று 36 ஆண்டுகளுக்குப் பிறகு உலகக்கிண்ணப் போட்டிக்கு கனடா தகுதிபெற்றது.




இந்த ஆண்டு கட்டாரில் நடந்த வடஅமெரிக்க பிராந்தியத்தின் இறுதிப் போட்டிக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் ஜமைக்கா அணிக்கு எதிராக கனடா ஆதிக்கம் செலுத்திய பின்னர் சைல் லாரின், தாஜோன் புக்கனன், ஜூனியர் ஹொய்லெட், ஜமைக்கா வீரர் அட்ரியன் மாரியப்பா ஆகியோரின் கோல்கள் மூலம் கட்டாரில் விளையாட கனடா தகுதி பெற்றது. இறுதியாக 1986 மெக்சிக்கோவில் விளையாடியிருந்தது.

ஒரு மேலாதிக்கத் தகுதிச் சுற்றுப் பிரகாரம் இரண்டு ஆட்டங்கள் எஞ்சிய நிலையில் மூன்று புள்ளிகளைத் தெளிவாக பெற்ற பிறகு, கனடாவுக்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் போட்டியிலிருந்து தகுதியை உறுதிப்படுத்திக் கொள்ள ஒரு புள்ளி மட்டுமே தேவைப்பட்டது. 21 வயதுக்குட்பட்ட போர்ச்சுவல் அணியின் முன்னாள் வீரர் ஸ்ரீபன் யுஸ்டாக்கியோ ஜமைக்காவின் பாதுகாப்பைப் பிரித்து முன்னேறினார்.

டேவிட், புக்கானன், ஜொனாதன், லாரின் ஆகிய வீரர்களின் விளையாட்டை ஜமைக்காவால் தடுக்க முடியவில்லை. கடந்த வியாழனன்று கோஸ்டாரிகாவிடம் 1-0 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து இறுதிப் போட்டியில் வெற்றிபெறத் தவறிய கனடா, புதிய நோக்கத்துடன் தாயகம் திரும்பியது. ஜமைக்காவுக்கு எதிரான போட்டியில் வெறித்தனமான வெற்றியைப் பெற்றது.

முதல் பாதியில் சைல் லாரின் மற்றும் தாஜோன் புக்கானன் ஆகியோர் வலைவீசி, ஜூனியர் ஹொய்லெட் இடைவேளைக்குப் பிறகு அட்ரியன் மாரியப்பாவின் சொந்தக் கோலை அடித்ததார். முதல் அணியாக கனடா தகுதிபெற்றது. அமெரிக்காவும், மெக்சிக்கோவும் தகுதி பெறக் காத்திருக்கின்றன.

# லீடர் வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றிய சாய்ந்தமருது பைன் ஸ்டார் வி. கழகம்

**(மாளிகைக்காடு நிருபர்)**

நற்பிட்டிமுனை விளையாட்டுக்கழகம் நடத்திய அணிக்கு 11 பேர் 20 ஓவர்கள் கொண்ட ரி-20 லீடர் சம்பியன்ஸ் கிண்ண கடினபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் சம்பியனாக சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் தெரிவானது.

கடந்த சில வாரங்களாக நற்பிட்டிமுனை தலைவர் அஷ்ரப் பொது மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் தனது குழுவில் மோதிய சகல அணிகளையும் வீழ்த்தி சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டது. மறுமுனையில் தனது குழுவில் போட்டியிட்ட சகல அணியினரையும் வீழ்த்தி வெற்றி பெற்ற மருதமுனை மறுகேப்பிட்டல் விளையாட்டுக் கழக அணி இறுதிப் போட்டியில் பைன் ஸ்டார் விளையாட்டுக் கழகத்துடன் மோதியது.

நற்பிட்டிமுனை தலைவர் அஷ்ரப் பொது மைதானத்தில் நடைபெற்ற இவ்விறுதிப் போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பைன் ஸ்டார் விளையாட்டுக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட 19.2 பந்துவீச்சு ஓவர்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் அர்ஷாத், யாஸிர், நஜித் ஆகியோர் சிறப்பாக துடுப்பெடுத்தாடினர்.



பதிலுக்கு 142 ஓட்டங்களை வெற்றி இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாட களமிறங்கிய மருதமுனை மறுகேப்பிட்டல் விளையாட்டுக் கழக அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களையும் எதிர்கொண்டு 08 விக்கெட்டுகளை இழந்து 115 ஓட்டங்களை மட்டுமே பெற்று தோல்வியை சந்தித்தது. இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக பைன் ஸ்டார் விளையாட்டுக் கழக அணி வீரர் சப்ராஸ் மற்றும் தொடரின் நாயகனாக நற்பிட்டிமுனை விளையாட்டுக் கழக வீரர் ஏ.எம்.நிலாஸ் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.



நற்பிட்டிமுனை கிரிக்கெட் கழகத்தின் தலைவரும், ஆசிரியரும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நடுவருமாகிய ஏ.எம். நிலாஸ் தலைமையிலும், தவிசாளர் மௌலவி ஏ.ஆர்.அஷ்ரப் மற்றும் முகாமையாளர் ஏ.எவ். நசீம் உட்பட முன்னாள் மற்றும் இந்நாள் கழக வீரர்கள் ஆகியோரின் நெறிப்படுத்தலிலும் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியின் பரிசளிப்பு நிகழ்விற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் பிரதம அதிதியாகவும், கௌரவ அதிதியாக கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்ஸூர் உட்பட அதிதிகள் பலரும் கலந்துகொண்டு கிண்ணங்களை வழங்கினர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7